# ஸ்ரீஹரி ஜோதிட வித்யாலயம்



**பயிற்சிக்கான**
**விளக்கவுரை**
**விண்ணப்பப்படிவம்**

# இறை வணக்கம்

## ஸ்ரீ விநாயகர் ஸ்துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகந்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

## ஸ்ரீ சரஸ்வதி ஸ்துதி

ஓம் வாக்தேவ்யைச வித்மஹே
விரிஞ்சி பத்ந்யைச தீமஹி
தந்நோ வாணி ப்ரசோதயாத்

## ஸ்ரீ ஹயக்ரீவர் ஸ்துதி

ஞானா னந்தமயம் தேவம், நிர்மல ஸ்படிகா க்ருதிம்
ஆதாரம் ஸர்வ வித்யானாம், ஹயக்ரீவ முபாஸ்மஹே

## நவக்கிரஹ ஸ்துதி

ஆதித்யாய ச ஸோமாய மங்களாய புதாய ச
குரு சுக்ர சனிப்யஸ்ச ராஹவே கேதவே நம:

## குரு ஸ்துதி

குரு ப்ரம்மா, குருர் விஷ்ணு, குரு தேவோ மகேஸ்வர:
குரு ஸாக்ஷாத் பரப்பிரம்மம் தஸ்மை ஸ்ரீ குரவே நம:

குரவே ஸர்வ லோகானாம்
பிஷஷே பவ ரோகினாம்
நிதயே ஸர்வ வித்யானாம்
ஸ்ரீ தக்ஷிணா மூர்த்தயே நம:

## குரு வணக்கம்

அன்பினாலே எமையாண்டு சொல்லதிகாரம் எமக்களித்து
விந்தை பல புரிய வைத்த வித்தகனே சற்குருவே
விண்ணவரும் வியந்து நிற்கும் வித்தையை எமக்களித்து
கண் போல காத்து நிற்கும் நற்குருவே போற்றி! போற்றி!!

**ஸ்ரீராம ஜெயராம ஜெய ஜெய ராமா...**

ஸ்ரீ

ஸ்ரீ ராமஜெயம்

# ஸ்ரீ ஹரி ஜோதிட வித்யாலயம்

## பயிற்சிக்கான விளக்கவுரை – விண்ணப்பப்படிவம்


ஸ்ரீஹரி ஜோதிட மற்றும் சங்கீத வித்யாலய அறக்கட்டளை


( அரசு பதிவு எண் : 220 / BK IV / 2007 PKM )

A1 - 657 / W - 9 - சூர்யா நகர், பசுமை நகர் எதிர்புறம், கொடுவிலார்பட்டி மெயின்ரோடு, அரண்மனைப்புதூர், தேனி.

Contact number - 63855 85559 / 90922 26465 / 73730 44901

Web : www.srihariastro.in E-mail : sriharijodhidam@gmail.com





## ஸ்ரீதேவி பூமா தேவி ஸமேத ஸ்ரீஹரி நாராயண பெருமாள்

### ஸ்ரீஹரி ஜோதிட வித்யாலயம்

# ஸ்ரீஹரி ஜோதிட வித்யாலயத்தின் நோக்கங்கள்

01. மிகச்சரியான ஜோதிட சாஸ்த்திரத்தை பொதுமக்களுக்கு போதித்து, ஜோதிட விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு, சமூகத்தினரை சாஸ்த்திரத்தை பின்பற்றி வாழச்செய்ய மாணவர்களை தகுநிலைப்படுத்துவது.

02. ஆன்மீகமும் ஜோதிடமும் இரு கண்களைப் போன்றது. இதற்கு உயிராக இருப்பது நமது சனாதனதர்மம் ஆகும். இதில் சொல்லப்பட்டிருக்கக் கூடிய வேதம், சாஸ்த்ரம் மற்றும் இதிகாசங்கள் தொடர்பான விழிப்புணர்வை சமூகத்தில் இருக்கும் அனைத்து தரப்பு மக்களும் அறிந்து கொள்ளச்செய்யும் விதமாக செயல்படுவது.

03. கர்ம வினைகளின்படியே ஒவ்வொருவர் வாழ்விலும் சுக துக்கங்கள் ஏற்படுகின்றன. "தீதும் நன்றும் பிறர் தர வாரா..", "ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்" என்று முன்னோர்கள் தெரிவித்த கருத்துக்கு இணங்க, அவரவர் செய்த வினைப்பதிவுகளே, அவரவர் பலன்களுக்கு காரணம் என்பதை உணரச் செய்து, அவற்றை எதிர்கொள்ளும் மனோபக்குவத்தை மாணவர்களுக்கும், அவர்கள் மூலமாக பொதுமக்களுக்கும் ஏற்படுத்துவது.

04. ஒவ்வொருவர் வாழ்விலும் நடைபெறும் ஒவ்வொரு அனுபவங்களும் அவரவர் திட்டமிட்டபடி நடைபெறுகிறது என்கின்ற பக்குவமற்ற நிலையை மாற்றி, அனைத்தும் இறைவன் நிகழ்த்துகிறார். அவரின் ஆணைப்படியே அனைத்து விஷயங்களும் நடைபெறுகின்றன என்கின்ற அடிப்படை ஞானம் அனைவருக்கும் ஏற்படும் விதமாக செயல்படுவது.

05. புகழ், பொருள், மோகம் இவைகளால் கிடைக்கும் இன்பம் தற்காலிகமானது என்கின்ற உயரிய ஞானத்தை மாணவர்களை அடையச்செய்து, ஜீவன் முக்தி நிலையை அடைவதே பிறவியின் பயன் என்பதையும் உணரச்செய்து, அதற்கு மிக எளிமையான வழி சரணாகதியே என்பதையும் மாணவர்களுக்கு மிக ஆழமாக புகட்டுவது.

06. பாரம்பரிய மிக்க நமது பாரத தேசத்தின் சிறப்புமிக்க பண்பாடு, கலாச்சாரங்களுக்கு பங்கம் ஏற்படாமல் பார்த்துக் கொள்வதோடு, அவற்றை முறையாக பின்பற்ற செய்வது.

07. சுய ஒழுக்கமே மனிதனை மிக உயர்ந்த நிலைக்கு அழைத்துச் செல்லும். மேலும் மிகச்சிறந்த சமூக சூழ்நிலை ஏற்படுவதற்கான வாய்ப்பாகவும் அமையும். ஆதலால், ஒழுக்கம் உயிரைவிட மேலானது என்பதை போதித்து மாணவர்களை சுய ஒழுக்கத்தோடு வாழச்செய்வதற்கான அறிவுரைகளை வழங்குவது.

08. ஜீவாத்மா பிறப்பு முதல் இறப்பு வரையிலும், இறப்பைத் தொடர்ந்து ஓர் ஆண்டுகள் வரையும் 40 விதமான ஸம்ஸ்காரங்கள் நமது சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அவை

தொடர்பான விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்தி, நமது சாஸ்த்ரங்கள் உணர்த்தும் ஸம்ஸ்காரங்களை பின்பற்றச் செய்வது.

09. சாஸ்த்திரங்களைப் பின்பற்றுவது, வாழ்வின் மகிழ்ச்சிக்கு பெரிதும் உதவும் என்கின்ற தெளிவை, மாணவர்களை உணரச் செய்து, அவர்கள் மூலமாக சமூகத்தில் இருக்கும் பொதுமக்களைப் புராண இதிகாசங்களில் சொல்லப்பட்டிருக்கும் சத்தியங்களைப் பின்பற்றி சாஸ்திரத்தின் வழியில் வாழச் செய்வதற்கான முயற்சி மேற்கொள்வது.

# மனித வாழ்க்கையும் ஜோதிட சாஸ்திரமும்

## ( ஜோதிடம் கற்பதன் அவசியம் )

ஜோதிடம் என்பது ஆகாயத்தில் ஜோதியாய் புலப்படுகின்ற கோள்களால் நமக்கு உண்டாகின்ற நன்மை தீமைகளைப்பற்றி முன்னதாகவே தெரிவிக்கின்ற ஒரு சாஸ்த்ரம் ஆகும். மனிதனுடைய வாழ்நாளில் எதிர்வரும் காலங்களில் வரப்போகின்ற நன்மை, தீமைகளைப்பற்றி முன்பே அறிந்து கொள்வது அவசியமான ஒன்றாகும். இதற்கு உதவும் வகையில் ஜோதிட சாஸ்த்ரம் இருக்கின்றபடியால், எக்காலத்திலும், எல்லோராலும் நன்கு மதிக்கப்படுகின்ற சாஸ்திரமாக உள்ளது.

ஜோதிடம் என்பது, ஜோதி இருக்கின்ற இடம் என்பதாகும். அதாவது வெளிச்சம் இருக்கும் இடத்தை, இருளில் இருப்பவர்களுக்கு காட்டிக் கொடுக்கும் ஓர் தெய்வீகமான, உன்னதமான கலையாகும். வேதத்தின் ஓர் அங்கமான, விஞ்ஞானம் மற்றும் கலை சேர்ந்த ஓர் அற்புத சாஸ்த்ரமாகும். திடமான, நிலையான, என்றுமே மாறாத ஜோதி சொரூபத்தை உணரச்செய்யும் அற்புத சாஸ்த்ரம் ஜோதிட சாஸ்த்ரமாகும்.

மனிதர்களுக்கு பொருள் தேடும் விஷயத்தில் உதவுகின்ற கருவியாகவும், ஆபத்தாகின்ற வாழ்க்கை கடலைத்தாண்டும் விஷயத்தில் கப்பலாகவும், சத்ரு ஜெயத்தை விரும்பும் சமயங்களில் நல்ல மதிநுட்பம் நிறைந்த மந்திரியாகவும் ஜோதிட சாஸ்த்ரம் அமைந்துள்ளது. சுருக்கமாகச் சொன்னால் ஜீவாத்மாவின் பயணத்தை எளிமையாக்கி, தனது மார்க்கத்தை உணரச் செய்து, தமது இலக்கை அடைய பேருதவி புரியும் மிக உயர்ந்த சாஸ்த்ரம் என்ற ஒன்று உண்டென்றால், அது ஜோதிட சாஸ்த்ரம் மட்டுமே. வேதத்தின் ஆறு அங்கங்களில் ஒன்றான ஜோதிட சாஸ்த்ரம் இல்லாவிட்டால், நம்முடைய நித்ய கர்மானுஷ்டானங்களை சரிவர நடத்த இயலாது. வேதத்தின் நேத்ர ஸ்தானமாக ஜோதிடம் போற்றப்படுகிறது. ஒருவருக்கு கண்கள் இல்லாவிடில் எவ்வளவு சிரமமோ, அதுபோல் ஜோதிடம் இல்லாவிடில் வேதத்தில் சொல்லிய கர்மாக்களை சரிவர நடத்த முடியாது. இப்படி பல சிறப்புக்கள் நிறைந்தது இந்த ஜோதிட சாஸ்த்ரம்.

தெய்வத்தில் துவங்கி, விசேஷமான பல ஆச்சார்ய குருபரம்பரையை கொண்டது ஜோதிடசாஸ்த்ரம். கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய முக்காலங்களையும்

உணர்த்தும் கருவியாக உள்ள, பல சிறப்புகள் கொண்ட, இந்த சாஸ்த்ரம் ஆதிபரம்பரைச் சொத்து எனக்கூறலாம். மக்களை உலகில் நம்பிக்கையுடன் வாழவைக்கவும், அவர்கள் ஆறுதல், தேறுதல் ஆகியவற்றோடு உலகில் நடமாடுவதற்கும், மிக முக்கிய வழிகாட்டி இந்த ஜோதிட சாஸ்த்ரமாகும். மக்கள் தங்கள் அபிலாஷைகள், நம்பிக்கைகள் ஆகியவற்றை இழக்காமலும், நன்னடத்தையையும், நற்பண்புகளையும் கொண்டு வாழ்க்கை நடத்திடவும் வழிகாட்டியாக இந்த சாஸ்த்ரம் உதவிபுரிகிறது. அவரவர்கள் தங்கள் நிலைகளை உணர்ந்து வாழ்ந்து வருவதற்கும், அந்த நிலைகளில் ஏற்படும் மாற்றங்களை அறிந்து கொள்வதற்கும், அந்த மாற்றங்களுக்கு ஏற்றபடி தங்களை தயார் செய்து கொள்வதற்கும் போதிய படிப்பினை இந்த ஜோதிட சாஸ்த்திரத்தில் உண்டு.

இப்பூமண்டலத்தில் பிறக்கும் ஜீவன்கள், செயல், குணம், நிறம், பாலினம், உருவபேதம், அறிவு ஆகியவற்றால் ஒன்றுக்கொன்று மாறுபடுவதற்கான காரணத்தைத் தெளிவாக்கி, உரைக்கப்பட்ட பொக்கிஷம்தான் இந்த ஜோதிட சாஸ்த்ரம். தனிமனிதனின் வாழ்க்கை நெறிமுறைகளை எடுத்துரைக்கும் வேதத்தின் ஓர் அங்கமாகவும், அதன் கண்களாகவும் இந்த சாஸ்த்ரம் போற்றப்படுகிறது. ஆகையால் இந்த சாஸ்த்ரம் மிகவும் பெருமை வாய்ந்தது என்று கருதுவதற்கு யாதொரு ஐயமுமில்லை. இதை அனேக வான சாஸ்திரிகளும், ஜோதிடர்களும் கையாண்டு கொண்டு வந்திருப்பதாக, நம்முடைய தேசத்து வானசாஸ்திர நூல்களாலும், ஜோதிட நூல்களாலும், இன்னும் இதர சாஸ்திரங்களாலும் புலப்படுகின்றது.

எண்ணங்களுக்கும் நவக்கிரகங்களுக்கும் தொடர்பு உண்டு. கோள்களின் ஈர்ப்பு விசைக்கும், பூமியின் ஈர்ப்பு விசைக்கும் இடையே உள்ள, ஏற்ற இறக்கங்களே பூமியில் வாழும் உயிரினங்களின் கர்மவினைகளைச் செயல்படுத்துகின்றன. பிறப்பிலிருந்து இறப்பு வரை மனிதனின் வாழ்க்கை கோள்களினாலேயே நடத்திச் செல்லப்படுகிறது.

ஜோதிடம் என்பது மக்களின் பழக்கவழக்கங்களிலும், நம்பிக்கைகளிலும் அன்றாட நடைமுறை வாழ்க்கையிலும் பின்னிப்பிணைந்து காணப்படுகிறது. மேலும் நம் ஒவ்வொருவரின் செயல்பாடுகள் அனைத்தும் ஜோதிடத்தின் துணையுடனேயே செயல்படுத்தப் படுகின்றன. நாளை என்ன நடக்கக் கூடும்?, இப்போது நாம் செய்வது சரியான செயலா?, இதே போன்று இப்பணியை மேற்கொண்டால் வெற்றி கிடைக்குமா?, என்கிற திட்டமிடுதல்களுக்கும், இன்றைய பிரச்சனைக்கு நேற்றைய வினைதான் காரணமாக உள்ளது என்பது போன்ற விபரங்களுக்கு தீர்வு தரும் மருந்தாகவும் ஜோதிடம் உள்ளது.

மனித வாழ்க்கையில் விடைகாண முடியாத மற்றும் புரியாத புதிராக உள்ள பல்வேறு விஷயங்களுக்கும் தீர்வைத்தருவது ஜோதிடம் ஆகும். ஜோதிடத்தை விரும்பும் நபராக இருந்தாலும் அல்லது விரும்பாத நபராக இருந்தாலும், அனைவரது வாழ்வும் ஒவ்வொரு நொடிப்பொழுதும் நவகோள்களாலேயே வழி நடத்தப்படுகின்றது. இன்பம் துன்பம் என்ற இரண்டிற்கும் காரணம் மனிதனுடைய செயல்பாடுகளே. மானுடம் நன்முறையில் வாழ வேண்டும் என்ற நோக்கத்தோடு ஏற்படுத்தப்பட்டதே ஒழுக்க நெறிமுறைகள். இந்த ஒழுக்க நெறிமுறைகளுடன் மக்கள் வாழ்வதற்கு பேருதவி புரிவது ஜோதிடம் ஆகும்.

ஜோதிடத்தை மிகச் சரியான முறையில் கடைப்பிடிப்பது என்பது சற்று கடினமான விஷயம் என்ற புரிதல் மக்களிடையே இருப்பதால்தான், இன்றைய சூழலில் மக்களின் வாழ்க்கை தடம்புரண்டு ஓடிக் கொண்டிருக்கிறது. இவற்றைக் கடைப்பிடிக்க இயலாது என எண்ணும் மனிதன், ஒவ்வொரு நாளும் தன்னுடைய பல கடமைகளை ஓடியாடி செய்து கொண்டுதான் இருக்கிறான். வாழத்துடிக்கும் மனிதன் வாழ்க்கையை எளிமையாக்கி தரும் வழிமுறைகளை கடைப்பிடிக்க தனக்கு நேரமில்லை என்று கூறி, தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்கிறான். இவன் ஜோதிடத்தின் மீது கவனம் செலுத்தி, அதனை முழுமையாக அறிந்து கொண்டு, தமது பணிகளை மேற்கொண்டால் நேரம் குறைவுபடுவதோடு, தேவையில்லாத பதற்றம், அச்சம் என்பவை இருக்காது. மனச்சுமை குறையும், சிந்தனையில் தெளிவும், சரியான மனநிலையும் அமைந்து நிம்மதியான வாழ்வை ஏற்படுத்தும். காலச்சூழலில் ஏற்படும் அன்றாட மனஉளைச்சலுக்கு ஜோதிடம் அருமருந்தாக அமையும். மனிதனின் வாழ்க்கையில் எவ்வித குழப்பமும் இல்லாமல் நிறைவு செய்ய தேவையானவைகள் ஜோதிடத்தில் உள்ளன.

மனித சிந்தனையை ஒழுங்குபடுத்தும் ஜோதிடத்தை அனைத்து பொதுமக்களும் தமது வாழ்வில் சரிவர கடைபிடிக்கும் போது, சமூகம் நன்முறையில் நெறிப்படுத்தப்படும் என்பதில் ஐயமில்லை. பொதுமக்கள் மேற்கொள்கின்ற எந்த ஒரு செயலையும், என்ன பயன் உடையது என்று ஆராய்வதும், கணக்கிடுவதும் உலக வழக்கமாக இருந்துவருகிறது. இதன் அடிப்படையில் பார்க்கும் பொழுது ஜோதிடம் வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் பொதுமக்கள் பலராலும் பின்பற்றப்பட்டு, அவர்களை நன்முறையில் நடத்துகின்ற ஆற்றல் உடையதாகவே உள்ளது.

இப்புவியில் தோன்றிய அனைத்து ஜீவாத்மாக்களும் தமது கடமையை நிறைவேற்ற, கடும் பிரயத்தனத்தை மேற்கொள்கின்றன. சில ஜீவாத்மாக்களுக்கு வாழ்வில் அதிக சிரமங்கள் இல்லாமலும், பல ஜீவாத்மாக்களுக்கு வாழ்வே சிரமமாகவும் இருப்பதைக் காண்கிறோம். அவரவர் கர்மவினைகளின்படி லாபநஷ்டங்களோடு கூடிய வாழ்க்கை முறைகளையே அனைத்து ஜீவாத்மாக்களும் அனுபவித்து வருகின்றன.

கர்ம வினையின்படி நடைபெறுகின்ற பலன்களையே விதி என்று சொல்கிறோம். விதிப்படியே அனைத்தும் நடைபெறுகிறது என்பதை உணர்ந்துள்ளோம். எவ்வளவு பெரிய புகழ் பெற்ற மனிதனானாலும், மிகப்பெரிய செல்வந்தனாலும், மிகச்சாதாரணமான மனிதனாலும், விதியின் கைப்பாவைகளாகவே இருக்க வேண்டியுள்ளது. அனைத்தும் விதி வசம் என்பதை உணர்ந்து, சாட்சியாக இருந்து வாழ்க்கையை மேற்கொள்ளும் பக்குவப்பட்ட மனிதர்கள் மிகவும் குறைவாகவே உள்ளனர். இதற்கு மாறாக உலக நிகழ்வுக்குக் காரணமான பேரறிவை நம்பாமல் தமது சிற்றறிவை நம்பி செயல்பட்டு ஆனந்தத்தையும், மகிழ்ச்சியையும் இழந்தவர்களே அதிகமாக உள்ளனர்.

“விதியை மதியால் வெல்லலாம்” என்பதைத் தவறாகப் புரிந்து கொண்டு, தமது ப்ராரப்தத்தை மீறி திட்டமிடுதல்களை செய்து, சங்கடங்களை சந்திப்போர் பலர். ஒருவரின் ப்ராரப்தத்தைப் பற்றி தெளிவாக அறிந்து கொள்வதற்கு பெருமளவு உதவுவது ஜோதிட சாஸ்த்ரமாகும். ஒரு ஜீவாத்மாவின் தோற்றம், குணம், செயல்பாடுகள், புகழ், அந்தஸ்து, கௌரவம், செல்வாக்கு, பொருளாதார நிலை, கல்வி, மனோதிடம், சுகபோகங்கள், சாஸ்த்ர ஞானம், நோய், கடன்,

மணவாழ்க்கை, ஆயுள், பந்துக்கள் அனுசரணை, தொழில், லாபம், புத்ரபாக்யம் போன்ற அனைத்தைப் பற்றியும் தெளிவாக உணர்த்துவதோடு, ஜீவாத்மாவின் ஜனனம் முதல் மரணம் வரை அனைத்து விபரங்கள் பற்றிய நிலைப்பாட்டைத் தெளிவாக அறிந்து கொள்வதற்கு ஜோதிட சாஸ்த்ரமே பெருமளவு பயன்படுகிறது. இவ்வாறிருக்க ஏதாவது சிரம காலங்களில் மட்டுமே மக்கள் ஜோதிடத்தை பயன்படுத்துகிறார்கள். பிரச்சனை வரும் போது தீர்வுக்காக ஒரு ஜோதிடரை சந்தித்தால், அப்போதைய பிரச்சனைக்கான தீர்வை மட்டுமே பெரும்பாலான ஜோதிடர்கள் வெளிப்படுத்துகிறார்கள். ஒரு ஜீவாத்மாவின் ப்ராரப்தம் தொடர்பான அனைத்து பலன்களையும் வெளிப்படுத்துவதற்கான காலச்சூழ்நிலை தற்போது இல்லை. ஜீவாத்மாவின் ப்ராரப்தத்தின்படி அனுபவிக்க இருக்கும் பலன்கள் அனைத்தைப் பற்றியும் எடுத்துரைக்கும் மிக உயரிய சாஸ்த்ரமான, இந்த ஜோதிட சாஸ்த்ரம் பற்றிய விழிப்புணர்வு பொது மக்களிடையே குறைவாக இருப்பது வருத்தத்திற்குரிய விஷயமாகும். ஆகவே ஜோதிட சாஸ்த்ரம் தொடர்பான அடிப்படை நிலைகளிலாவது ஒருவர் ஞானம் பெற்றிருக்க வேண்டியது அவசியமானதாகும். ஜோதிடராக வேண்டும் என்பதற்காக ஜோதிடத்தைப்பயில வேண்டியது இல்லை. ஒவ்வொருவரின் வாழ்க்கை நெறிமுறைகளை அறிந்து கொள்வதற்கும், வாழ்வில் ஏமாற்றங்களைக் குறைத்துக் கொள்வதற்கும் ஒருவருக்கு ஜோதிட ஞானம் அவசியமானதாகும்.

ஒரு தனி மனிதனின் வாழ்க்கை நிலைப்பாட்டை அறிந்து கொள்வதற்கு உதவுவதோடு மட்டுமல்லாமல், கால,தேச,வர்த்தமானங்கள், பருவ காலங்கள், இயற்கை சீற்றங்கள் மற்றும் சமூக நிலைப்பாடுகள் ஆகியவற்றைப் பற்றியும் அறிந்து கொள்வதற்கு ஜோதிடம் பேருதவி புரிகிறது. இவ்வாறு அனைத்து நிலைகளிலும் உதவக்கூடிய உயரிய சாஸ்த்ரமான ஜோதிட சாஸ்த்ரம் பற்றிய ஞானம் எத்தனை பேருக்கு இருக்கிறது?. ஒரு ஜீவாத்மாவிற்கு அனைத்து நிலைகளிலும் உதவக்கூடியது இந்த ஜோதிட சாஸ்த்ரம் என்கிற ஞானத்துடன் கூடிய பொதுமக்கள் குறைவாகவே இருக்கிறார்கள்.

குழந்தை பிறந்தவுடன் பெயர் வைப்பதற்கும், திருமணப்பொருத்தங்களின் போதும், புதிய தொழில் துவங்கும் போதும் மற்றும் வாழ்க்கையில் தோல்விகளையும், ஏமாற்றங்களையும், சங்கடங்களையும் சந்திக்கும் பொழுதும் மட்டுமே பெரும்பாலானோர் ஜோதிட சாஸ்த்ரத்தைப் பயன்படுத்துகிறார்கள். ஆனால் ஒரு ஜீவன் தாயின் கருவறையில் இருக்கும்போது செய்யப்படுகின்ற பும்சவனம், வளைகாப்பு, சீமந்தம் போன்றவைகளுக்கும், குழந்தை பிறந்தவுடன் எந்த எழுத்துக்களில் எந்த எண்ணில் பெயர் வைக்க வேண்டும் என்பதற்கும், பிறந்த குழந்தையை முதன் முதலில் தொட்டிலில் இடுவதற்கும், பிறப்புத்தீட்டு நீக்குவதற்கும், பெயர் வைப்பதற்கும், அரைஞாண் கயிறு அணிவிப்பதற்கும், முதல் வஸ்த்ரம் உடுத்துவதற்கும், அன்னப்ராசனம் எனப்படும் முதன் முதலில் சோறூட்டுவதற்கும், முடியிறக்குவதற்கும், காதுகுத்துவதற்கும், முதலாண்டு நிறைவான ஆயுஷ்யஹோமம் நிகழ்த்துவதற்கும், வித்யாரம்பம் செய்வதற்கும், வளர்ந்த பின்பு விவாஹம் செய்வதற்கும், விவாஹத்தின் முக்கிய நிகழ்வான மாங்கல்யம் செய்வதற்கும், சாந்தி முகூர்த்தம் (நிஷேகம்) போன்ற முக்கிய சடங்குகளுக்கும், முகூர்த்தம் குறிப்பதற்கு உதவுவதோடு மட்டுமல்லாமல், பெரும்பாலானோர் வாழ்க்கையில் சந்திக்கின்ற நிகழ்வுகளான புத்தாடை உடுத்த, வாகனம் வாங்க, முதல் பிரயாணம் செய்ய, கிருஹாரம்பம் செய்ய, க்ருஹப்ரவேசம் செய்ய, புது ஆபரணம் அணிய,

வியாதிக்கு மருந்துண்ண, வியாதியஸ்தர் குளிக்க, பிரயாணம் செய்ய, தொழில் துவங்க, கடன் கொடுக்க, கடன் வாங்க போன்றவற்றிற்கும் உதவுகிறது. மேலும் பிறப்பு, ருது, இறப்பு கால தீட்டு விபரங்களையும், ஜீவாத்மாவின் வசிப்பிடம் தொடர்பான வாஸ்து சாஸ்த்ரத்தையும், அதோடு சகுன, நிமித்த சாஸ்த்ரங்களையும், கனவு பலன்களையும் தெரிவிப்பதோடு மட்டுமல்லாமல் ஒரு ஜீவாத்மா சந்திக்கின்ற மகிழ்ச்சிகரமான அனுபவங்களையும், ஏமாற்றம், துயரம், சங்கடங்கள் ஏற்படுகின்ற காலங்களையும், விபத்துக் காலத்தையும் அறிந்து கொள்வதற்கும் பேருதவி புரிகிறது.

பெரும்பாலானோர் ஜோதிடராவதற்கு மட்டுமே ஜோதிடம் படிக்க வேண்டும் என்று எண்ணுகிறார்கள். ஆனால் நமது அன்றாட வாழ்க்கையில் அவசியம் பின்பற்றப்பட வேண்டியது இந்த ஜோதிட சாஸ்த்ரம் என்பதை உணராமல் இருக்கிறார்கள். ஜோதிடம் அறிந்த ஒருவர் வாழ்க்கையில் ஏமாற்றங்களைக் குறைத்துக் கொள்வதற்கான வாய்ப்பு அதிகம் உள்ளது. ஒருவர் மேற்குறிப்பிட்ட அனைத்து விஷயங்கள் தொடர்பாகவும் ஒரு ஜோதிடரை சந்தித்து தீர்வைப் பெற்றுவிட முடியும் என்று எண்ணுகிறீர்களா?

முந்தைய காலங்களில் வீட்டிலுள்ள பெரியோர்கள் வாழ்வியல் தத்துவங்களை எடுத்துக் கூறியும், செய்யக்கூடிய மற்றும் செய்யக்கூடாத விஷயங்களைப் பற்றியும், மருத்துவத்தைப் பற்றியும், உணவுப் பழக்கவழக்க முறைகள் பற்றியும், இவை எல்லாவற்றுக்கும் மேலாக விழாக்கள், பண்டிகைகள் போன்ற நமது பண்பாடு, கலாச்சாரம் சார்ந்த கருத்துக்களையும் எடுத்துக்கூறி குடும்பத்தை வழி நடத்தி வந்தனர். இத்தகைய பெரியோர்கள் தற்போது குறைவாக இருப்பது வருத்தத்திற்குரிய விஷயமாகும். இத்தகைய நிலைப்பாடு மாறுவதற்கு அனைவருக்கும் ஜோதிட ஞானம் அவசியம் என்பதை உணர வேண்டும்.

நமது வாழ்க்கையின் யதார்த்தத்தை அறிந்து கொள்வதற்கும், வாழ்க்கையில் சந்திக்கின்ற தோல்விகள் மற்றும் சங்கடங்களிலிருந்து விடுபடுவதற்கும், ஏமாற்றமில்லாத வாழ்க்கை அமைத்துக்கொள்வதற்கும் மிகச் சிறந்த பரிகாரம் ஒன்று உண்டென்றால், அது ஜோதிட சாஸ்த்ரத்தை அறிந்து கொள்வது மட்டுமே. பொதுமக்கள் தங்களின் கர்ம பலன்படி அனுபவிக்கும் பலன்களை அறிந்து கொண்டு வாழ்க்கையை எளிமைப்படுத்திக் கொண்டு ஏமாற்றமில்லாத மகிழ்ச்சியான வாழ்க்கை வாழச்செய்ய வேண்டும் என்கிற உயரிய நோக்கத்தோடு அனைத்து மக்களும் ஜோதிட சாஸ்திரம் தொடர்பான விழிப்புணர்வு பெற வேண்டும் என்பதற்காக துவங்கப்பட்டதே ஸ்ரீஹரி ஜோதிட வித்யாலயம் ஆகும்.



# வித்யாலயத்தின் தோற்றம்

எல்லாம் வல்ல இறைப்பரம்பொருள் உலகில் தோன்றிய அனைத்து ஜீவாத்மாக்களுக்கும் முக்தி, மோட்சம் என்கின்ற உயரிய அனுக்கிரகத்தை வழங்குவதற்கே விரும்புகிறார். ஆனால், இதற்கு ஜீவாத்மாக்கள் செய்த வினைப்பதிவுகள் தடையாக உள்ளன. ஜீவாத்மாக்கள் அனைத்திற்கும் முக்தி தர விரும்பும் இறைவன், ஒரே பிறவியில் தனது வினைப்பதிவுகள் அனைத்தையும் எடுத்துக்கொண்டு புவியில் தோன்றும் ஜீவாத்மாக்கள் மிகுந்த சிரமங்களைச் சந்திக்கும் என்பதால், மிகுந்த கருணையோடு வினைப்பயன்களை முழுவதுமாக அனுபவித்து தீர்ப்பதற்கு பல்வேறு பிறவிகளைக் கொடுக்கிறார். தமது மொத்த பாவச்சுமையில் சிறிதளவை எடுத்து, அதனை அனுபவிப்பதற்காக ஆன்மாவிற்கு உடல் கொடுத்து இப்புவியில் ஜெனிக்க செய்கிறார். இவ்வாறு தோன்றிய ஜீவாத்மாக்கள் ஜனனமான நாள் முதல், தனது ஆயுட்காலம் வரை, தான் கொண்டு வந்த பாவச்சுமையான கர்ம வினைகளின் அடிப்படையிலேயே அனுபவங்களைச் சந்தித்து வருகின்றன.

தன்னுடைய ஆயுட்காலத்தில் கொண்டு வந்த கர்மாவை முழுவதுமாக அனுபவிக்கவும், அதனை மேலும் அதிகரிக்காமல் பார்த்துக்கொள்வதற்கும், ஜீவாத்மாக்களுக்கு பெரிதும் உதவும் வகையில் கருணையே வடிவான இறைப்பரம்பொருள், வேதங்களைத் தோற்றுவித்ததோடு இதிகாசங்களையும் நிகழ்த்தி, அவ்வப்போது உலகில் அவதரித்தும், திருவிளையாடல்களை நிகழ்த்தியும், தர்ம நெறிமுறைகளை உபதேசிப்பதோடு, குருமார்களைத் தோற்றுவித்து வாழ்வியல் தத்துவங்கள், வாழ்க்கை நெறிமுறைகள், பண்பாடு, கலாச்சாரம் சார்ந்த விஷயங்கள் இவற்றையெல்லாம் தெரிவித்து, ஜீவாத்மாக்களைப் பின்பற்றச்செய்து தமது வினைப்பயன்களை அதிகரிக்கவிடாமல் அனுக்கிரகிக்கிறார். ஆகவே, ஜீவாத்மாக்களின் பாதுகாப்பு அரணாகவும், கவசமாகவும் விளங்குவது நமது சாஸ்திரங்கள் என்றால் அது மிகையல்ல.

இவ்வாறிருக்க உலகில் தோன்றிய ஜீவாத்மாக்கள் போதிய சாஸ்திர ஞானத்தைப் பெற்று, வாழ்வின் உண்மையான அர்த்தங்களை அறிந்து கொள்ளாமல் தன் இஷ்டப்படி வாழ்ந்து, பெரும்பாலும் சிரமங்களையும், கஷ்டங்களையும் சந்தித்து வருகின்றன. இந்நிலைப்பாட்டை மாற்றி, ஜீவாத்மாக்கள் வாழ்வின் அனுபவங்களைச் சந்திக்கும் போது ஏற்படும் குழப்பங்களை நீக்கி, அனைவரையும் தமது வினைப் பயன்களை ஏற்று அனுபவிக்கும் பக்குவத்தை வரவழைத்து, மகிழ்ச்சியும் ஆனந்தமும் நிறைந்த வாழ்க்கையை வாழச்செய்ய வேண்டியது அவசியமாகிறது.

| | | | |
|---|---|---|---|
| சந் | | | செ |
| ரா | 24.10.2007<br>11:24 AM<br>தேனி | | |
| | | | கே சு<br>சனி |
| ல/ | வி | பு<br>சூ | |

சாஸ்திரங்களைப் பின்பற்றி, சாஸ்திரங்கள் உணர்த்தும் விதத்தில் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் பொழுது, கர்ம பலன்கள் அதிகரிப்பதற்கான சூழல் இல்லை. மேலும் கொண்டு வந்த வினைப்பதிவுகளை ஆனந்தமாகவும், மகிழ்ச்சியாகவும் எதிர்கொள்ளும் பக்குவமும் ஏற்படுகிறது. ஆகவே தற்போதைய வாழ்வியல் சூழலில் வாழ்ந்து வரும் அனைவருக்கும் சாஸ்திர ஞானம் மிகவும் அவசியம் வாய்ந்தது என்பதை உணர்ந்து, அனைவருக்கும் சாஸ்த்ரஞானம் என்ற உயரிய நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக இறைக்கருணையால், இறையாணைக்கிணங்க தோற்றுவிக்கப்பட்ட நிறுவனமே ஸ்ரீஹரி ஜோதிட வித்யாலயம் என்கின்ற சாஸ்த்ரப் பயிற்சிப்பள்ளி ஆகும்.



ஸ்ரீஹரி ஜோதிட வித்யாலயமானது கடந்த **24.10.2007** ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. தமிழ் தேசத்தின் தென்பகுதியில் தேனி மாவட்டத்தில் வைகையின் பிறப்பிடத்தில் அமைந்துள்ள கண்டமனூர் என்னும் கிராமத்தை சார்ந்த மீனம். K.S. மணி பட்டாச்சாரியார் அவர்களால் இந்நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டது. இவர் தனது கிராமத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீதேவி பூமாதேவி ஸமேத ஸ்ரீரங்கநாதப் பெருமாள் திருக்கோவிலில் கடந்த ஆறு தலைமுறைகளாக அர்ச்சகராக கைங்கர்யத்தை மேற்கொண்டும், இப்பகுதி மக்களுக்கு வைதீகக் காரியங்களை நிகழ்த்தியும் வருகிறார். நிறுவனர் ஐயா அவர்கள், **1995** ஆம் ஆண்டு முதல் ஜோதிட ஆராய்ச்சிகளை மேற்கொண்டு சிறந்த ஜோதிட ஆராய்ச்சி நூல்களையும் இயற்றி, நூல் ஆசிரியராகவும் சேவை செய்து வருகிறார். “ஜோதிடம் அறிந்த மானுடம் செய்வோம்.” என்ற உயர்ந்த இலக்கைக் கொண்டு தமிழகம் மட்டுமல்லாது உலகெங்கிலும் உள்ள பொதுமக்கள் ஜோதிடத்தை முறைப்படியாக அறிந்து கொள்வதற்கு ஸ்ரீஹரி ஜோதிட வித்யாலயத்தையும் நிறுவி சேவையாற்றி வருகிறார் . இவரது சீரிய முயற்சியால் **2008** பிப்ரவரி மாதம் முதல் தேனி, திருப்பூர், மதுரை, பழனி, மணப்பாறை, பொள்ளாச்சி, காரைக்குடி, புதுக்கோட்டை, இராஜபாளையம் ஆகிய ஒன்பது இடங்களில் பயிற்சி வகுப்புக்கள் துவங்கப்பட்டன. அதனை தொடர்ந்து தன்னிடத்தில் பயின்ற மாணவர்களின் ஒத்துழைப்போடு தற்போது தமிழகத்தின் 85 மையங்களில் நேரடியாகவும், ஆன்லைன் மூலம் உலகெங்கிலும் ஜோதிடப் பயிற்சி வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

## அரசுப்பதிவு எண்

ஸ்ரீஹரி ஜோதிட ஸங்கீத வித்யாலய அறக்கட்டளையின் அரசுப்பதிவு எண்

**220/BKIV/2007/PKM**

## தலைமையிடம்



### ஸ்ரீஹரி ஜோதிட வித்யாலயம்

A1 - 657 / W - 9 - சூர்யா நகர், பசுமை நகர் எதிர்புறம்,
கொடுவிலார்பட்டி மெயின்ரோடு,
அரண்மனைப்புதூர், தேனி - 625 531.


90922 26465, 6385585559, 7373044901.

web : www.srihariastro.in | email : sriharijodhidam@gmail.com

வித்யாலயத்தின் தலைமை அலுவலகம் மேற்கண்ட முகவரியில் செயல்பட்டு வருகிறது. வார நாட்களில் காலை **10.00** மணி முதல் மாலை **06.00** வரை அலுவலகம் செயல்படும். மாணவர்கள் மேற்குறிப்பிட்ட நேரங்களில் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.

### வித்யாலயத்தின் திருவாராதனை மூர்த்தி

அவனன்றி ஓரணுவும் அசையாது என்பது ஆன்றோர் வாக்கு, தெய்வத்தின் அருட்கடாட்க்ஷம் இல்லாமல் தெய்வீகக் கலையாம் ஜோதிடக் கலை சிறப்படையாது என்பதை கருத்தில் கொண்டு, நிறுவனத்தின் சீரிய முயற்சியாலும், வித்யாபதிகள் மற்றும் மாணவர்களின் பெரும் ஒத்துழைப்போடும், பஞ்சலோகத்தாலான **ஸ்ரீதேவி, பூதேவி ஸமேத ஸ்ரீஹரி நாராயணப் பெருமாளின் விக்ரஹம்** வடிவமைக்கப்பட்டு, **108** திவ்ய தேசங்களில் ஒன்றான **திருக்கோஷ்டியூரில்** ஸ்ரீராமானுஜரின் பிரதிநிதிகளில் ஒருவரான **ஸ்ரீபெரும்புதூர் எம்பார் ஜீயர் ஸ்வாமிகள்** முன்னிலையில், கடந்த **16.05.2012** ஆம் நாள் **வைகாசி - உத்திரட்டாதியில்,** பிரதிஷ்டா ஹோமங்கள் செய்யப்பட்டு வித்யாலயத்தின் திருவாராதனை மூர்த்தியானார். அன்று முதல் நிறுவனம் தொடர்பான எல்லா விழாக்களிலும் ஸ்ரீதேவி, பூதேவி ஸமேத ஸ்ரீஹரி நாராயணப்பெருமாள் எழுந்தருளி அனைவரையும் அனுக்ரஹிக்கின்றார்.



## நிர்வாகக்குழு உறுப்பினர்கள்




திரு. K.S.மணி பட்டாச்சாரியர்
B.A., D.Astro.,
2007 - Oct



திருமதி. S.P. மகாலெட்சுமி
M.Sc., D.Astro.,
2008 - Feb



திரு. S. தமிழன்
D.Astro.,
2008 - Feb



திரு. Dr.V. கிருஷ்ணமூர்த்தி
M.A., D.Astro.,
2010 - Aug



திரு. A. பெருமாள்
B.A., D.Astro.,
2010 - Aug



திரு. K. பொன்சரவணன்
B.Com., D.Astro.,
2011 - Aug



திருமதி. S. லலிதா
B.A., DTP.,
2011 - Aug

நிர்வாகத்தின் ஆக்கப்பூர்வமான செயல்திட்டங்கள் பற்றி விவாதிக்க, நிர்வாகக்குழு கூட்டம் ஒவ்வொரு ஆங்கில மாதத்தின் இரண்டாவது செவ்வாய்க்கிழமை தோறும் தலைமை அலுவலகத்திலோ அல்லது நிறுவனரால் தீர்மானிக்கப்படும் இடத்திலோ நடைபெறும். தேவைப்பட்டால் நிர்வாகக்குழு கூட்டம் ஒரு மாத இடைவெளிக்கு முன்பாகவும் நிறுவனரின் விருப்பப்படி கூட்டப்படும்.


## செயற்குழு உறுப்பினர்கள்



திரு. P. சந்திரசேகரன்
2010 - Feb



திரு. A. நாச்சியப்பன்
2010 - Aug



திரு. A. பாஸ்கர்
2011 - Feb



திரு.T.ராமானுஜதாசன்
2012 - Aug

# பொதுக்குழு உறுப்பினர்கள்



திருமதி.N. உமா
2013 - Feb



திருமதி. P. லோகநாயகி
2013 - Aug



திரு. K.பழனிக்குமார்
2013 - Aug



திரு. S.P. ராமசாமி
2014 - Feb



திரு. R.பத்ரி நாராயணன்
2014 - Feb



திரு. G. முருகேசன்
2014 - Feb



திரு. R. குமார்
2015 - Feb



திரு. C. பாக்கியநாதன் டில்லி
2015 - Feb



திரு. E. பார்த்தசாரதி
2015 - Feb



திரு.S. பாலசுப்ரமணியன்
2015 - Aug



திரு. K. வெங்கடேசன்
2015 - Aug



திரு. B. சீனிவாசன்
2015 - Aug



திரு. K. வேலுமணி
2016 - Feb



திரு. S. மணி
2016 - Aug



திரு. M. தணிகைவேல்
2016 - Aug



திரு. N. சங்கர்ராம்
2016 - Aug



திரு. K.B. சுரேஷ்பாலாஜி
2017 - Feb



திரு. M. சேகர்
2017 - Aug



திரு. S. பரிஷித்
2017 - Aug



திரு. S. ராமதாஸ்
2017 - Aug


திரு. P. பிரம்மசண்முகம்
2018 - Feb


திரு. M. விஜயம்தங்கராஜ்
2018 - Aug


திரு.N.சிவசுப்பிரமணியன்
2019 - Feb


திரு. S. சம்பத்குமார்
2019 - Feb


திரு.N.முருகையன்
2019 - Feb


திருமதி. S. ராஜலட்சுமி
2019 - Feb


திரு. K. பிரபு
2019 - Feb


செல்வி.N.S.ஸ்ரீமதிலட்சுமி
2019 - Feb


திரு. T. அரசன்
2019 - Feb


திரு.K. ரவிக்குமார்
2019 - Feb


திரு. S. முருகன்
2019 - Nov


திரு. P. பூபதி
2020 - Oct


திரு. G. பாலசுப்ரமணி
2021 - Jul


திரு. J. ராஜீவி
2021 - Nov


திரு.N. கதிரேசன்
2021- Jan


திரு. K. உமாமகேஸ்வரன்
2021 - Feb


திரு.R.சங்கரநாராயணன்
2021 - Jan


திரு. T. சக்திபாலன்
2021 - Nov


திரு.P. பாலமுரளி
2022- Dec


திரு. P. சுரேஷ்
2022 - May



திரு. J. சுதர்சன்குமார்
2022 - Jun



திரு. M.S. ஸ்ரீநிவாசன்
2022 - Jun



திரு.K.பிரகாஷ்
2022 - Jun



திரு. M. முத்துகிருஷ்ணன்
2022 - Jun



திரு.N.சுதாகர்
2022 - Jun



திரு. P.V. மாகதேவன்
2022 - Jul



திரு. K. முத்துசுப்ரமணி
2022 - Jul



திரு.A.தமிழரசன்
2022 - Jun



G.பாஸ்கர்
2022 - Dec



திரு.S.கணேசன்
2023 - May



திரு. P.முருகேசன்
2023 - Jun



திரு. R. வேல்முருகன்
2023 - Jun




வித்யாலயத்தின் நிர்வாகக்குழு, செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்களே ஜோதிட பயிற்சி வகுப்புகள் நடத்தும் பயிற்சி ஆசிரியர்கள் ஆவார்கள். இவர்களுக்கு "ஜோதிஷ வித்யாபதிகள்" என்னும் தகுநிலையை நிறுவனம் வழங்கியுள்ளது.

# வித்யாலயத்தின் பயிற்சி ஆசிரியர்கள்

| | | |
|---|---|---|
| 01. | திருமதி. S.P. மகாலட்சுமி M.Sc., D.Astro., | திண்டுக்கல் |
| 02. | திரு. S. தமிழன் D.Astro., | மதுரை |
| 03. | திரு. V. கிருஷ்ணமூர்த்தி M.A., D.Astro.,DASc | கோவை |
| 04. | திரு. A. பெருமாள் B.A., D.Astro., | தேனி |
| 05. | திரு. P. சந்திரசேகரன் D.Astro., | பாண்டிச்சேரி |
| 06. | திரு. A. நாச்சியப்பன் M.A., D.Astro., | தேவகோட்டை |
| 07. | திரு. A. பாஸ்கர் B.A., D.Astro., | கரூர் |
| 08. | திரு. K. பொன்சரவணன் MA., D.Astro., | சேலம், ஆத்தூர் |
| 09. | திரு. T. ராமானுஜதாசன் D.Astro., | திருப்பத்தூர் |
| 10. | திருமதி. N. உமா கிருஷ்ணமூர்த்தி B.Sc., D.Astro., | கோவை |
| 11. | திருமதி. P. லோகநாயகி M.A., D.Astro., | தூத்துக்குடி |
| 12. | திரு. K. பழனிக்குமார் D.Astro., | பரமக்குடி, அருப்புக்கோட்டை, |
| 13. | திரு. S.P. ராமசாமி D.Astro., | சத்தியமங்கலம் |
| 14. | திரு. R. பத்ரிநாராயணன் D.Astro., | விழுப்புரம் |
| 15. | திரு. G. முருகேசன் D.Astro., | அம்பத்தூர், திருவான்மியூர், மேற்குமாம்பலம் |
| 16. | திரு. R. குமார் D.Astro., | விருதுநகர் |
| 17. | திரு. C. பாக்கியநாதன் டில்லி B.A., D.Astro., | பூந்தமல்லி |
| 18. | திரு. E. பார்த்தசாரதி M.A., D.Astro., | வேலூர், திருவண்ணாமலை, ஆரணி |
| 19. | திரு. S. பாலசுப்பிரமணியன் B.Sc., D.Astro., | ஆன்லைன் |
| 20. | திரு. K. வெங்கடேஷன் M.A., D.Astro., | திருவொற்றியூர் |
| 21. | திரு. B. சீனிவாசன் D.Astro., | திருத்தணி |
| 22. | திரு. K. வேலுமணி D.Astro., | திருப்பூர், இடைப்பாடி |
| 23. | திரு. S. மணி DCE., D.Astro., | சென்னிமலை |
| 24. | திரு. M. தணிகைவேல் B.BA., D.Astro. | காஞ்சிபுரம், மதுராந்தகம் |
| 25. | திரு. N. சங்கரராம் BE., MBA., D.Astro. | மடிப்பாக்கம் |
| 26. | திரு. K.B. சுரேஷ்பாலாஜி B.Com., D.Astro., | பொன்னேரி,புரசைவாக்கம்,ரெட்ஹில்ஸ் |
| 27. | திரு. M. சேகர் D.Astro., | திண்டிவனம் |
| 28. | திரு. S. பரிஷித் B.Sc., D.Astro., | சிதம்பரம் |
| 29. | திரு. S. ராமதாஸ் M.Sc.,B.Ed., D.Astro., | விருத்தாச்சலம், வடலூர் |
| 30. | திரு. P. பிரம்மசண்முகம் D.Astro., | மைலாப்பூர் |
| 31. | திரு. M. விஜயம்தங்கராஜு D.Astro | பெரம்பலூர், மணச்சநல்லூர் |

| | | | |
|---|---|---|---|
| 32. | திரு. N. சிவசுப்பிரமணியன் | D.Astro. | பணகுடி |
| 33. | திரு. S. சம்பத்குமார் | D.Astro. | ஈரோடு |
| 34. | திரு. N. முருகையன் | D.Astro. | கள்ளக்குறிச்சி |
| 35. | திருமதி. S. ராஜலட்சுமி | B.A., D.Astro. | காரைக்குடி,சிவகங்கை |
| 36. | திரு. K. பிரபு | D.Astro. | போரூர் |
| 37. | செல்வி. N.S. ஸ்ரீமதிலட்சுமி | D.Astro. | ஆன்லைன் |
| 38. | திரு. T. அரசன் | B.A., D.Astro., | சோழிங்கநல்லூர் |
| 39. | திரு. K. ரவிக்குமார் | D.Astro., | பொள்ளாச்சி, |
| 40. | திரு. S. கடலாடி முருகன் | D.Astro., | மேட்டுப்பாளையம்,கோபி,நாமக்கல், தாராபுரம் |
| 41. | திரு. P. பூபதி | BE., MBA.,D.Astro., | தென்காசி, கோவில்பட்டி |
| 42. | திரு. G. பாலசுப்ரமணியன் | D.Astro., | மானாமதுரை |
| 43. | திருமதி. J. ராஜீவி | M.A., B.Ed., M.Phil.,D.Astro., | ஆன்லைன் கடலூர் |
| 44. | திரு. N. கதிரேசன் | D.Astro., | கும்பகோணம், மயிலாடுதுறை |
| 45. | திரு. K. உமாமகேஸ்வரன் | M.Sc., M.Phil., B.Ed., D.Astro., | திருச்சி |
| 46. | திரு. R. சங்கரநாராயணன் | D.Astro., | வந்தவாசி |
| 47. | திரு. T. சக்திபாலன் | D.Astro., | திருநெல்வேலி |
| 48. | திரு. P. பாலமுரளி | .D.Astro., | இராமநாதபுரம் |
| 49. | திரு. P. சுரேஷ் | B.A., D.Astro., | திருச்செந்தூர் |
| 50. | திரு. J. சுதர்சன்குமார் | M.C.A.,MA.,D.Astro., | திருக்கழுக்குன்றம், செங்கல்பட்டு |
| 51. | திரு. M.S. ஸ்ரீநிவாசன் | DEEE.,BE., D.Astro., | கிருஷ்ணகிரி |
| 52. | திரு. K. பிரகாஷ் | B.Sc., D.Astro., | ஒசூர் |
| 53. | திரு. M.முத்துகிருஷ்ணன் | B.A., D.Astro., | பழநி |
| 54. | திரு. N. சுதாகர் | BE.,DEEE.,D.Astro., | சிங்கப்பூர் |
| 55. | திரு. P.V. மகாதேவன் | D.Astro., | நாகர்கோவில் |
| 56. | திரு. M. முத்துசுப்ரமணியன் | D.Astro., | இராமேஸ்வரம் |
| 57. | திரு. A. தமிழரசன் | D.Astro., | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 58. | திரு. G. பாஸ்கர் | B.Sc.,Bed., D.Astro., | ஆற்காடு |
| 59. | திரு. S. கணேசன் | D.Astro., | அம்பாசமுத்திரம் |
| 60. | திரு. P. முருகேசன் | DCE.D.Astro., | புதுக்கோட்டை |
| 61. | திரு. R. வேல்முருகன் | D.Astro., | அரியலூர் |
| 62. | திரு. K. சத்யநாராயணன் | BE., D.Astro., | ஆன்லைன் |
| 63. | திரு. A. திருமுருகன் | M.A.,B.Sc.,Bed., D.Astro., | தஞ்சாவூர் |

# பாடநூல் விபரம்

வித்யாலயத்தில் இணைந்து பயில வரும் மாணவர்களுக்காக வித்யாலய நிறுவனர் அவர்களால் மிகுந்த கவனத்துடன் எழுதப்பட்ட பாடப்புத்தகங்கள் மட்டுமே பயன்படுத்தப் படுகின்றன. ஜோதிடத்தின் அடிப்படை நிலை முதல் பிரசன்னாரூடங்கள் வரை பல்வேறு ஜோதிட தலைப்புகளில் பாடங்கள் மிக எளிமையாக வடிவமைக்கப்பட்டுள்ளன. நிறுவனர் ஐயா அவர்களின் ஜோதிட ஆராய்ச்சியும், கடந்த 30 ஆண்டுகால அனுபவத்தையும் கொண்டு ஆய்வுகள் செய்து மிகமிக எளிமையான நடையில் பாடப்புத்தகங்கள் வடிவமைக்கப் பட்டுள்ளன. இந்த பாடப்புத்தகங்கள் மொத்தம் ஐந்து பாகங்களாக வெளியிடப்பட்டிருக்கிறது. இதில் முதல் பாகம் அடிப்படை பயிற்சிக்கும், 2 மற்றும் 3-ம் பாக பாடப்புத்தகங்கள் உயர்நிலை பயிற்சிக்கும், 4 மற்றும் 5-ம் பாக பாடப்புத்தகங்கள் முதுநிலைப் பயிற்சிக்கும் பயன்படுத்தப்படுகின்றன. பாடப்புத்தகங்கள் அனைத்தும் 222mm x 276 mm அளவில் முற்றிலும் வண்ணமயமாக வடிவமைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.




| | | |
|---|---|---|
| I | 2007 | 1000 |
| II | 2012 | 1000 |
| III | 2013 | 1000 |
| IV | 2014 | 1000 |
| V | 2015 | 2000 |
| VI | 2017 | 2000 |
| VII | 2019 | 2000 |
| VIII | 2020 | 2000 |
| IX | 2022 | 1000 |
| X | 2023 | 1000 |



முதல் பாக பாடப்புத்தகம்
வெளியீடு – 12.03.2008




| | | |
|---|---|---|
| I | 2008 | 1000 |
| II | 2010 | 1000 |
| III | 2012 | 1000 |
| IV | 2014 | 1000 |
| V | 2016 | 1000 |
| VI | 2018 | 1000 |
| VII | 2021 | 1000 |
| VIII | 2023 | 1000 |



இரண்டாம் பாக பாடப்புத்தகம்
வெளியீடு – 07.09.2008




| | | |
|---|---|---|
| I | 2009 | 1000 |
| II | 2011 | 1000 |
| III | 2013 | 1000 |
| IV | 2015 | 1000 |
| V | 2017 | 1000 |
| VI | 2018 | 1000 |
| VII | 2020 | 1000 |
| VIII | 2023 | 1000 |



மூன்றாம் பாக பாடப்புத்தகம்
வெளியீடு – 20.12.2009

---





| | | |
|---|---|---|
| I | 2012 | 1000 |
| II | 2016 | 1000 |
| III | 2018 | 1000 |
| IV | 2019 | 1000 |
| V | 2020 | 1000 |
| VI | 2022 | 1000 |



நான்காம் பாக பாடப்புத்தக
வெளியீடு : 25.12.2012

---




| | | |
|---|---|---|
| I | 2012 | 1000 |
| II | 2014 | 1000 |
| III | 2017 | 1000 |
| IV | 2019 | 1000 |
| V | 2021 | 1000 |
| VI | 2022 | 1000 |



ஐந்தாம் பாக பாடப்புத்தக வெளியீடு : 31.05.2013
எம்.ஆர்.பி. மஹால் எஸ்.எஸ். காலனி – மதுரை.

## பயிற்சி கையேடு புத்தகங்கள் ( Work book )











அடிப்படை, உயர்நிலை மற்றும் முதுநிலை மாணவர்களின் செய்முறை பயிற்சிக்காக மூன்று கையேடு புத்தகங்களை நிறுவனம் வெளியீடு செய்திருக்கிறது.

---

## துணை நூல் விபரம்




வித்யாலயத்தின் வித்யாபதிகளால் தயாரிக்கப்பட்ட, மாணவர்களின் கணிதத் திறமையை வளர்த்துக் கொள்ளும் வகையில், கணிதத்திற்கான துணைநூல் ஒன்றை நிறுவனம் வெளியீடு செய்திருக்கிறது. இந்த துணைநூல் முதுநிலைப் பயிற்சியின் போது மாணவர்களுக்கு வழங்கப்படும்.

---

## ஆராய்ச்சி நிலை




முதுநிலை நிறைவு செய்த மாணவர்களுக்கு நிறுவனம் குறிப்பிடும் தலைப்பில் ஆய்வுகள் செய்து ஆராய்ச்சி கட்டுரை சமர்பிப்பதற்கு உதவும் வகையில் ஆராய்ச்சி நிலைக்கான கையேடு புத்தகத்தை நிறுவனம் வெளியீடு செய்துள்ளது.

**வித்யாலயத்தின் பாடப்புத்தகங்களுக்கு இந்திய அரசாங்கம் காப்புரிமை வழங்கியுள்ளது.**

Copyright Office
Government of India

सत्यमेव जयते

# Extracts from the Register of Copyrights

Dated : 17/09/2020

| | | | |
|---|---|---|---|
| 1. | Registration Number | : | **L-94815/2020** |
| 2. | Name, address and nationality of the applicant | : | S MANI , SRI HARI JODHIDA VIDHYALAYAM NO:6C PANGAJAM HOUSE STREET PERIYAKULAM ROAD THENI-625531 INDIAN |
| 3. | Nature of the applicant's interest in the copyright of the work | : | AUTHOR |
| 4. | Class and description of the work | : | LITERARY/ DRAMATIC WORK |
| 5. | Title of the work | : | PRINCIPALS AND PRACTICE JODHIDAM |
| 6. | Language of the work | : | TAMIL |
| 7. | Name, address and nationality of the author and if the author is deceased, date of his decease | : | S MANI , SRI HARI JODHIDA VIDHYALAYAM NO:6C PANGAJAM HOUSE STREET PERIYAKULAM ROAD THENI-625531 INDIAN |
| 8. | Whether the work is published or unpublished | : | PUBLISHED |
| 9. | Year and country of first publication and name, address and nationality of the publisher | : | 2008 INDIA S MANI , SRI HARI JODHIDA VIDHYALAYAM NO:6C PANGAJAM HOUSE STREET PERIYAKULAM ROAD THENI-625531 INDIAN |
| 10. | Years and countries of subsequent publications, if any, and names, addresses and nationalities of the publishers | : | N.A. |
| 11. | Names, addresses and nationalities of the owners of various rights comprising the copyright in the work and the extent of rights held by each, together with particulars of assignments and licences, if any | : | S MANI , SRI HARI JODHIDA VIDHYALAYAM NO:6C PANGAJAM HOUSE STREET PERIYAKULAM ROAD THENI-625531 INDIAN |
| 12. | Names, addresses and nationalities of other persons, if any, authorised to assign or licence of rights comprising the copyright | : | S MANI , SRI HARI JODHIDA VIDHYALAYAM NO:6C PANGAJAM HOUSE STREET PERIYAKULAM ROAD THENI-625531 INDIAN |
| 13. | If the work is an 'Artistic work', the location of the original work, including name, address and nationality of the person in possession of the work. (In the case of an architectural work, the year of completion of the work should also be shown). | : | N.A. |
| 14. | If the work is an 'Artistic work' which is used or capable of being used in relation to any goods or services, the application should include a certification from the Registrar of Trade Marks in terms of the provision to Sub-Section (i) of Section 45 of the Copyright Act, 1957 | : | N.A. |
| 15. | If the work is an 'Artistic work', whether it is registered under the Designs Act 2000 if yes give details. | : | N.A. |
| 16. | If the work is an 'Artistic work', capable of being registered as a design under the Designs Act 2000.whether it has been applied to an article though an industrial process and ,if yes ,the number of times it is reproduced. | : | N.A. |
| 17. | Remarks, if any | : | |

Diary Number : 8132/2020-CO/L
Date of Application : 19/06/2020
Date of Receipt : 19/06/2020

COPYRIGHT OFFICE ★ GOVT. OF INDIA

DEPUTY REGISTRAR OF COPYRIGHTS

## பயிற்சிக் காலம்

| | | | |
|---|---|---|---|
| அடிப்படை | ஜோதிடப்பயிற்சி | = | 6 மாதங்கள் |
| உயர்நிலை | ஜோதிடப்பயிற்சி | = | 6 மாதங்கள் |
| முதுநிலை | ஜோதிடப்பயிற்சி | = | 6 மாதங்கள் |

**அடிப்படை முதல் முதுநிலை வரை ஸ்ரீஹரி ஜோதிட வித்யாலயத்தில் ஜோதிடம் பயில ஒன்றரை வருடங்கள் ஆகும்.**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| முதுநிலை ஜோதிடப்பயிற்சி | காலை | 08.30 | மணிமுதல் | மதியம் | 11.30 | மணிவரை |
| அடிப்படை ஜோதிடப்பயிற்சி | காலை | 11.30 | மணிமுதல் | மதியம் | 02.30 | மணிவரை |
| உயர் நிலைப்பயிற்சி | மதியம் | 03.00 | மணிமுதல் | மாலை | 06.00 | மணிவரை |

## பயிற்சிக்கான தகுநிலை

தமிழ் எழுதப்படிக்கத்தெரிந்த ஓரளவு கணித அறிவு உடைய ஆண்களும், பெண்களும் பயிற்சியில் சேரலாம்.

## வித்யாலயத்தின் பயிற்சி முறை (Academic Structure)

வித்யாலயத்தில் ஜோதிடக் கலை நான்கு பிரிவுகளாக போதிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. அடிப்படை | (Basic) | 3. முதுநிலை | (Specialised Higher) |
| 2. உயர்நிலை | (Higher) | 4. ஆராய்ச்சி நிலை | (Senior Grade) |

## 1. அடிப்படை (Basic)

அடிப்படைப்பயிற்சி ஆறு மாதங்களுக்கு வழங்கப்படுகிறது. ஒரு வருடத்தில் இரண்டு முறை புதிய வகுப்புகள் தொடங்கப்படுகிறது. வருடத்தின் பிப்ரவரி, ஆகஸ்ட் மாதங்களில் சனி அல்லது ஞாயிற்றுக்கிழமைகளில் வகுப்புகள் ஆரம்பிக்கப்படும். கற்பிக்கும் நேரமும் உள்ளூர் வசதிக்கேற்ப மாற்றி அமைக்கப்படும்.

### அடிப்படை பயிற்சி இரண்டு தாள்கள்

**1. ஜோதிடத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் கணித முறைகள்** (BTA - I)

**2. பலன் காண்பதற்கான அடிப்படை நிலைகள்** (BTA - II)

### 1. ஜோதிடத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் கணித முறைகள் (BTA - I)

01. ஜோதிடத்தின் அறிமுகம்
02. ராசிமண்டலம்
03. கிரகங்களின் தன்மைகள்
04. பஞ்சாங்கம்
05. ஆண்டுகளும், அயனங்களும்
06. பஞ்சாங்க விளக்கங்கள் - பகுதி - 1

07. பஞ்சாங்க விளக்கங்கள் - பகுதி - 2

08. பஞ்சாங்க விளக்கங்கள் - பகுதி - 3

09. ஜாதக கணித முறைகள்

10. வாக்கியப் பஞ்சாங்கப்படி ஜென்ம லக்னம் மற்றும் ஜென்மராசி கணிதம்

11. ராசி மற்றும் நவாம்சச் சக்கரம் அமைத்தல்

12. திருக்கணிதப் பஞ்சாங்கப்படி ஜென்ம லக்னம் கணித்தல்

13. திருக்கணிதப் பஞ்சாங்கப்படி ஜென்மராசி கணிதம்

## 2. பலன் காண்பதற்கான அடிப்படை நிலைகள் (BTA - II)

14. பாவக காரகத்துவம்

15. கிரகங்களின் காரகத்துவம்

16. பன்னிரு பாவகங்களின் ஸ்தான விபரங்கள்

17. ஜோதிடச் சொல் விளக்கம்

18. பன்னிரு இலக்னங்களுக்கு சுபர் பாபர் அறியும் முறை

19. பாவகாதிபதிகள் பன்னிரு பாவகங்களில் நிற்கும் பலன்

20. கிரகங்கள் பன்னிரு பாவகங்களில் நின்ற பலன்கள்

21. இலக்ன பொதுப்பலன்கள்

22. ஜாதக பொதுப்பலன் காணும் விதம்

## அடிப்படை தேர்வு

| | | | |
|---|---|---|---|
| BTA - I | = | 100 | ( 100 X 1 =100 ) (தேர்ச்சிக்கான விகிதம் 35%) |
| BTA - II | = | 100 | ( 100 X 1 = 100 ) (தேர்ச்சிக்கான விகிதம் 35%) |
| Practical | = | 200 | ( வாக்கிய கணிதம் 40 ) + ( திருக்கணிதம் 60 ) |
| | | | ( ஜாதக பொதுப்பலன் 50 X 2 = 100 ) (தேர்ச்சிக்கான விகிதம் 50%) |

**தேர்வுகள் அனைத்தும் அந்தந்த மையங்களிலேயே நடைபெறும்**

## அடிப்படை பயிற்சி தேர்வு மற்றும் தகுநிலை விபரம்

அடிப்படை நிலை தேர்வில் மொத்தம் 400 மதிப்பெண்களுக்கு தேர்வு நடத்தப்படும். இதில் 200 மதிப்பெண்களுக்கு எழுத்து தேர்வாகவும், 200 மதிப்பெண்களுக்கு செய்முறை தேர்வாகவும் நடத்தப்படும். செய்முறை தேர்விற்கு பயிற்சியின் ஆரம்பத்திலேயே கையேடு புத்தகத்தை பெற்றுக் கொண்டு, அதில் பயிற்சிகள் மேற்கொள்ளவேண்டும். இப்புத்தகத்தில் தொடர்புடைய பாடங்கள் கற்பிக்கப்படும் சமயத்தில், பயிற்சிகள் மேற்கொண்டு தேர்வு நடைபெறுவதற்கு 15 தினங்களுக்கு முன்பாக பயிற்சி ஆசிரியரிடம் சேர்ப்பிக்க வேண்டும். இந்த செய்முறை பயிற்சி தேர்வு 200 மதிப்பெண்களுக்கு நடத்தப்படும். இதில் 50% மதிப்பெண்களும், அடிப்படை தேர்வு தாள்கள் ஒவ்வொன்றிலும் (BTA-I, BTA-II) 35% மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு அடிப்படை சான்றுகள் வழங்கப்படும். மேலும் அவர்கள் மட்டுமே உயர்நிலை பயில அனுமதிக்கப்படுவார்கள்.

## அடிப்படைப் பயிற்சி கட்டண விபரம்

| | | | |
|---|---|---|---|
| மாணவர் சேர்க்கை கட்டணம் | : | ரூ. | 100.00 |
| அடிப்படை சேவைக் கட்டணம் (மாதம் ரூ. 600/- வீதம்) 6 x 600 | : | ரூ. | 3600.00 |
| அடிப்படைத் தேர்வுக்கட்டணம் | : | ரூ. | 1000.00 |
| அடிப்படை பாடப் புத்தகக் கட்டணம் (முதல் பாகம்) 1 x 500 | : | ரூ. | 500.00 |
| அடிப்படை கையேடுப் புத்தகம் | : | ரூ. | 300.00 |
| **அடிப்படை பயிற்சிக்கான மொத்தக் கட்டணம்** | : | ரூ. | **5500.00** |

## 2. உயர்நிலை (Higher)

உயர்நிலைப்பயிற்சியானது அடிப்படைப் பயிற்சியில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு மட்டும் அளிக்கப்படுகிறது. இதுவும் ஆறு மாத காலப் பயிற்சியே. அடிப்படைப் பயிற்சியின் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டபின் உயர்நிலை வகுப்புகள் ஆரம்பமாகும். இதுவும் பிப்ரவரி, ஆகஸ்ட் மாதங்களில் ஆரம்பிக்கப்படும்.

### உயர்நிலைப் பயிற்சி இரண்டு தாள்கள்

01. ஜாதகப் பலன் காணுதல் மற்றும் கணித முறைகள் (HTA - I)
02. திருமண பொருத்தம் - முகூர்த்தம் - வாஸ்து - எண்கணிதம் (HTA - II)

### 1. ஜாதகப் பலன் காணுதல் மற்றும் கணித முறைகள் (HTA - I)

01. ஜாதகப் பலன்காணும் முறைகள்.
02. பாவக வலிமையை ஆய்வு செய்யும் விதம்.
03. பாவகங்கள் பெறும் வலிமையால் நிர்ணயிக்கப்படும் பலன்கள்.
04. திசாபுத்திப் பலன்கள் நிர்ணயிக்கும் முறைகள்.
05. ஜாதகங்களும் திசாபுத்திப் பலன்களும்.
06. இயங்கும் பாவகங்களால் நிர்ணயிக்கப்படும் பலன்கள்.
07. பாவகாதிபதிகளின் திசாபுத்தி பலன்கள் நிர்ணய முறைகள்.
08. லக்னம் மற்றும் கிரக ஸ்புடம் காண்பது.
09. பாவகச்சக்கரம் மற்றும் வர்க்க சக்கரங்கள் அமைப்பது.
10. இராசி, அம்சம், தசவர்க்கம் மற்றும் அஷ்டவர்க்கம் கணித்து, நோட்டுப் புத்தகத்தில் எழுதுதல்
11. அஷ்ட வர்க்கம்

### 02. திருமணப்பொருத்தம் - முகூர்த்தம் - வாஸ்து - எண்கணிதம் (HTA - II)

12. ஸம்ஸ்காரங்களும் விவாக நெறிமுறைகளும்
13. ராசிகள், கிரகங்கள், பாவகங்கள் உணர்த்தும் திருமணப் பலன்கள்

14. திருமணப்பொருத்த ஆய்வுமுறைகள் - தோஷங்கள்.
15. பாவக மற்றும் திசாரீதியான திருமணப்பொருத்தம்
16. நட்சத்திர ரீதியான திருமணப் பொருத்தம்
17. மணவாழ்க்கையும், ஜோதிட காரணிகளும்
18. ஸ்ரீஹரியின் திருமணப்பொருத்த நிர்ணயம்
19. முகூர்த்தம் நிர்ணயிக்கும் வழிமுறைகள்.
20. வாஸ்து சாஸ்திரம்
21. எண் கணிதம்

## உயர்நிலை தேர்வு

| | | | |
|---|---|---|---|
| HTA - I | = | 100 | (100 X 1 = 100) (தேர்ச்சிக்கான விகிதம் 35%) |
| HTA - II | = | 100 | (100 X 1 = 100) (தேர்ச்சிக்கான விகிதம் 35%) |
| Practical | = | 300 | (கையேடுப்புத்தகத்தில் உள்ளபடி) (தேர்ச்சிக்கான விகிதம் 60%) |

## உயர்நிலை பயிற்சி தேர்வு மற்றும் தகுநிலை விபரம்

உயர்நிலை பயிற்சியில் 500 மதிப்பெண்களுக்கு தேர்வுகள் நடத்தப்படும். இதில் 300 மதிப்பெண்களுக்கு செய்முறைத் தேர்வாகவும், 200 மதிப்பெண்களுக்கு எழுத்துத் தேர்வாகவும் நடத்தப்படும். செய்முறைத் தேர்விற்கான 300 மதிப்பெண்களுக்கு பயிற்சியின் துவக்கத்தில் **"செய்முறை பயிற்சி கையேடு "** வழங்கப்படும். இதில் பயிற்சியின் போது கேட்கப்பட்ட வினாக்களுக்கு அவ்வப்போது பதில்களை எழுதி, மைய ஆசிரியரிடம் சேர்ப்பிக்க வேண்டும். 300 மதிப்பெண்களுக்கான விபரம் **" செய்முறை பயிற்சி கையேட்டில் "** இடப்பெற்றிருக்கும். பயிற்சி ஆசிரியரால் அவ்வப்போது திருத்தப்படுகின்ற செய்முறை பயிற்சி கையேடானது தேர்வு நாளில் பயிற்சி ஆசிரியர் மூலமாக தலைமைக்கு அனுப்பி வைக்கப்படும். 200 மதிப்பெண்களுக்கான எழுத்துத்தேர்வில் தலா 60%, 300 மதிப்பெண்களுக்கான செய்முறை தேர்வில் 60% க்கு மேல் மதிப்பெண்கள் பெற்றவருக்கு **ஜோதிட ரத்னா,** 200 மதிப்பெண்களுக்கான எழுத்துத்தேர்வில் தலா 50%, 300 மதிப்பெண்களுக்கான செய்முறை தேர்வில் 60% க்கு மேல் மதிப்பெண்கள் பெற்றவருக்கு **ஜோதிட சிரோன்மணி,** 200 மதிப்பெண்களுக்கான எழுத்துத்தேர்வில் தலா 40%, 300 மதிப்பெண்களுக்கான செய்முறை தேர்வில் 60% க்கு மேல் மதிப்பெண்கள் பெற்றவருக்கு **ஜோதிட மாமணி** என்ற அடிப்படையில் தகுநிலைச் சான்றுகள் வழங்கப்படும்.

## உயர்நிலைப் பயிற்சி கட்டண விபரம்

| | | | |
|---|---|---|---|
| உயர்நிலை சேவைக் கட்டணம் (மாதம் ரூ.600/- வீதம்) 6 x 600 | : | ரூ. | 3600.00 |
| உயர்நிலை தேர்வுக்கட்டணம் | : | ரூ. | 1100.00 |
| உயர்நிலை பாடப்புத்தக கட்டணம் ( II - பாகம்) 1 x 500 | : | ரூ. | 500.00 |
| ( III - பாகம்) 1 x 500 | : | ரூ. | 500.00 |
| உயர் நிலை பயிற்சி கையேடு புத்தகம் | : | ரூ. | 300.00 |
| **உயர்நிலை பயிற்சிக்கான மொத்தக் கட்டணம்** | : | ரூ. | **6000.00** |

## 3. முதுநிலை (Specialised Higher)

முதுநிலை வகுப்புகள் உயர்நிலை தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு மட்டுமே அளிக்கப்படுகிறது. இதுவும் ஆறு மாத காலப்பயிற்சியே. உயர்நிலைத் தேர்வு முடிவுகள் வெளியான பின்பே முதுநிலை வகுப்புகள் ஆரம்பமாகும். இதுவும் பிப்ரவரி, ஆகஸ்ட் மாதங்களில் ஆரம்பிக்கப்படும்.

### முதுநிலை பயிற்சி பாடங்கள்

**01. பஞ்சாங்க நுணுக்கங்களும் பிரசன்னாரூட முறைகளும்** (SHTA - I)
**02. ஜாமக்கோள், நாடி, தொழில்முறை ஜோதிடம்** (SHTA - II)

**01. பஞ்சாங்க நுணுக்கங்களும் பிரசன்னாரூட முறைகளும்** (SHTA - I)

01. பஞ்சாங்க நுணுக்கங்கள்
02. ஜாதக கணித முறைகள்
03. மாந்தியின் மகத்துவம்
04. பிரசன்ன ஆரூட முறைகள்
05. தாம்பூலப் பிரசன்னம்
06. சோழிப் பிரசன்ன ஆரூடம்
07. பிரசன்னப் பலன்கள் அறியும் விதம்
08. அஷ்ட மங்களப் பிரசன்னம்
09. அஷ்ட மங்களப் பிரசன்னப் பலன்கள்

**02. ஜாமக்கோள், நாடி, தொழில்முறை ஜோதிடம்** (SHTA - II)

10. ஜாமக்கோள் பிரசன்னம்
11. ஜாமக்கோள் பிரசன்ன பலன்கள் நிர்ணயிக்கும் முறைகள்
12. ஜாமக்கோளும் முக்கிய பிரசன்னங்களும்
13. நாடி ஜோதிட ரகசியங்கள்
14. கிரக சேர்க்கை பலன்கள்
15. நாடியில் திருமணப்பொருத்தம்
16. தொழில்முறை ஜோதிடம்

### முதுநிலை தேர்வு

| | | | |
|---|---|---|---|
| SHTA - I | = | 100 | ( 100 X 1 = 100 ) (தேர்ச்சிக்கான விகிதம் 35%) |
| SHTA - II | = | 100 | ( 100 X 1 = 100 ) (தேர்ச்சிக்கான விகிதம் 35%) |
| Practical | = | 500 | (கையேடுப்புத்தகத்தில் உள்ளபடி) (தேர்ச்சிக்கான விகிதம் 60%) |

## முதுநிலை பயிற்சி தேர்வு மற்றும் தகுநிலை விபரம்

முதுநிலை பயிற்சியில் **700** மதிப்பெண்களுக்கு தேர்வுகள் நடத்தப்படும். இதில் **500** மதிப்பெண்களுக்கு செய்முறை தேர்வாகவும், **200** மதிப்பெண்களுக்கு எழுத்துத் தேர்வாகவும் நடத்தப்படும். செய்முறை தேர்விற்கான **500** மதிப்பெண்களுக்கு பயிற்சியின் துவக்கத்தில் **"செய்முறை பயிற்சி கையேடு"** வழங்கப்படும். இதில் பயிற்சியின் போது கேட்கப்பட்ட வினாக்களுக்கு அவ்வப்போது பதில்களை எழுதி, மைய ஆசிரியரிடம் சேர்ப்பிக்க வேண்டும். **500** மதிப்பெண்களுக்கான விபரம் **" செய்முறை பயிற்சி கையேட்டில் "** இடம்பெற்றிருக்கும். பயிற்சி ஆசிரியரால் அவ்வப்போது திருத்தப்படுகின்ற செய்முறை பயிற்சி கையேடு, தேர்வு நாளில் பயிற்சி ஆசிரியர் மூலமாக தலைமைக்கு அனுப்பிவைக்கப்படும். முதுநிலைப் பயிற்சி மூன்று தாள்களிலும் சேர்த்து **60%** மேல் மதிப்பெண்கள் பெற்றிருந்தால் **"ஜோதிட கலாநிதி"** சான்றிதழ் வழங்கப்படும்.

## முதுநிலைப் பயிற்சி கட்டண விபரம்

| | | | |
|---|---|---|---|
| முதுநிலை சேவைக் கட்டணம் (மாதம் ரூ.700/- வீதம்) 6 x 700 | : | ரூ. | 4200.00 |
| முதுநிலை பாடப்புத்தக கட்டணம் ( IV - பாகம் ) 1 x 700 | : | ரூ. | 700.00 |
| ( V - பாகம் ) 1 x 700 | : | ரூ. | 700.00 |
| முதுநிலைத் தேர்வுக்கட்டணம் | : | ரூ. | 1300.00 |
| முதுநிலை செய்முறைப்பயிற்சிப் புத்தகக்கட்டணம் | : | ரூ. | 300.00 |
| ஜாதக பல்லவம் புத்தகம் 1 x 300 | : | ரூ. | 300.00 |
| **முதுநிலைப் பயிற்சிக்கான மொத்தக் கட்டணம்** | : | ரூ. | **7500.00** |

---

## 4. ஆராய்ச்சி நிலை (Senior Grade)

வித்யாலயத்தின் 3-ம் நிலை பயிற்சியான முதுநிலை பயிற்சியை நிறைவு செய்த மாணவர்கள் பயிற்சி நிறைவு செய்த நாளிலிருந்து ஒரு வருடத்திற்குள் வித்யாலயப் பயிற்சிப் பாடநூல் மூலமாகவும், பயிற்சி வகுப்புக்களின் போது வித்யாபதிகள் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையிலும், தாங்கள் பலன்களை வெளிப்படுத்தும் பொழுது கிடைக்கின்ற அனுபவங்களின் அடிப்படையிலும் ஆராய்ச்சிக் கட்டுரை தயாரித்தல் மற்றும் வாய்மொழித் தேர்வில் கலந்து கொள்ளும்படி ஆராய்ச்சி நிலை பயிற்சி இருக்கும்.

### பயிற்சி தொடர்பான விபரங்கள்

கீழ்க்கண்ட தலைப்புகளில் ஏதாவது ஒரு தலைப்பை தேர்ந்தெடுத்து, உண்மையான **25** ஜாதகங்களைச் சேகரித்து தேர்ந்தெடுக்கப்பட்ட தலைப்பின் கீழ் ஆய்வுகள் மேற்கொண்டு, கொடுக்கப்பட்டுள்ள ஆராய்ச்சி புத்தகத்தில் எழுத வேண்டும்.

## ஆய்விற்கான தலைப்புகள்

01. சொந்த நிலத்தில் விவசாயம் செய்பவர்
02. திருமணம் ஆகாதவர்(50 வயதுக்கு மேல்)
03. அரசியல்வாதிகள்
04. தொழிலதிபர்கள்
05. ராணுவத்துறை
06. காவல்துறை
07. நீதித்துறை
08. சிறை சென்றவர்
09. உணவகம் நடத்துபவர்
10. காதல் திருமணங்கள்
11. கலப்பு திருமணங்கள்
12. விவாகரத்து பெற்றவர்கள்
13. மாற்றுத்திறனாளிகள்
14. நகைக்கடை உரிமையாளர்
15. 60 வயது வரை புத்ரபாக்யம் இல்லாதவர்
16. பால்காரர்
17. மளிகை கடைக்காரர்
18. வாகன பழுது நீக்குபவர்
19. செவிலியர்
20. வெளிநாட்டில் குடியுரிமை
21. ஆசிரியர்கள்
22. பெரிய விபத்தை சந்தித்தவர்
23. தத்துபுத்திரர்கள் உடையவர்கள்
24. சிறுவயதில் பெற்றோரை இழந்தவர்
25. மருத்துவர் - ( மனிதன் )
26. தொழில்முறை புகைப்பட கலைஞர்
27. இரட்டை குழந்தைகள்
28. உயர் கல்வி கற்றவர்
29. நவாம்சகன்
30. படிக்காதவர் (10-ம் வகுப்பிற்கு கீழ்)

**குறிப்பு:** மேற்கண்ட தலைப்புகளைத்தவிர வேறு தலைப்புக்களையும் மாணவர்கள் தேர்ந்தெடுக்கலாம். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் தலைப்பை கடிதம் மூலமாக தலைமைக்கு அனுப்பி, ஒப்புதல் பெற்ற பின்பு ஆராய்ச்சியை தொடரலாம். ஒப்புதல் கடிதத்தை ஆராய்ச்சி புத்தகத்தோடு இணைக்க வேண்டும். ஆய்விற்கு எடுத்துக் கொண்ட ஜாதகங்களின் உண்மைத் தன்மை சரிபார்க்கப்படும்.

2. பயிற்சியில் இணைந்த நாள் முதல், எதிர்வரும் காலத்தில் வித்யாலயத்தால் நடத்தப்படும் **2** இலவச ஜோதிட முகாமில் கலந்து கொண்டு, முகாம் ஒன்றிற்கு **5** ஜாதகங்கள் வீதம் பார்வை செய்து பலன்களை வெளிப்படுத்த வேண்டும்.

3. பயிற்சியில் இணைந்த நாள் முதல் எதிர்வரும் காலத்தில் வித்யாலயத்தால் நடத்தப்படும் **3** பேரவைக் கூட்டங்களில் கலந்து கொண்டு, பேரவைத் தலைப்பின்கீழ் **2** பக்க அளவிலான ஆராய்ச்சிக் கட்டுரை சமர்ப்பிக்க வேண்டும்.

4. பயிற்சியின் நிறைவாக ஒரு குறிப்பிட்ட தினத்தில் நடத்தப்படும் வாய்மொழி தேர்வில் **(Viva)** தவறாது கலந்து கொள்ள வேண்டும்.

## மதிப்பெண்கள்

| | | |
|---|---|---|
| 01. 25 ஜாதகங்களின் ஆய்விற்கான மதிப்பெண்கள். | | 25 X 20 = 500 |
| 02. 2 முகாமில் பார்க்கப்படும் 10 ஜாதகங்களுக்கான மதிப்பெண்கள். | | 10 X 08 = 80 |
| 03. 3 பேரவைக் கூட்டங்களில் கலந்து கொண்டு, ஆராய்ச்சி கட்டுரை எழுதுவதற்கான மதிப்பெண்கள். | } | 03 X 40 = 120 |
| 04. வாய்மொழி தேர்வு (Viva) மதிப்பெண்கள். | | 01 X 100 = 100 |
| **ஆக மொத்த மதிப்பெண்கள்** | | = 800 |

மேற்குறிப்பிட்ட 800 மதிப்பெண்களில் ஒவ்வொரு நிலையிலும் (4 நிலையிலும்) தனித்தனியாக 60% மதிப்பெண்களை அவசியம் பெற வேண்டும்.

## ஆராய்ச்சி நிலை தகுநிலை விபரம்

ஆராய்ச்சிநிலை பயிற்சியில் 800 மதிப்பெண்களுக்கு தேர்வுகள் நடத்தப்படும். இந்த 800 மதிப்பெண்களுக்கான தேர்வு, செய்முறை தேர்வாகவே நடத்தப்படும். இதற்காக பயிற்சியின் துவக்கத்தில் செய்முறை பயிற்சிக் கையேடு வழங்கப்படும். வித்யாலயத்தின் முதுநிலை பயிற்சியை நிறைவு செய்த மாணவர்கள், இப்பயிற்சியில் இணைந்த ஒரு வருடத்திற்குள், வித்யாலயப் பயிற்சிப்பாடநூல் மூலமாகவும், பயிற்சி வகுப்புக்களின்போது வித்யாபதிகள் தெரிவித்தக் கருத்துக்களின் அடிப்படையிலும், தாங்கள் பலன்களை வெளிப்படுத்தும் பொழுது கிடைக்கின்ற அனுபவங்களின் அடிப்படையிலும், செய்முறை பயிற்சிக் கையேடு புத்தகத்தில் உள்ள விபரங்களின் அடிப்படையிலும், ஆய்வுகள் செய்து சமர்ப்பிக்க வேண்டும். ஆராய்ச்சி நிலைக்கான 800 மதிப்பெண்களில், 600 மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கு **“ஜோதிஷ வாசஸ்பதி”** என்ற சிறப்புத் தகுநிலைச் சான்று வழங்கப்படும்.

மாணவர்கள் கையேடு புத்தகத்தில் மேற்கொண்ட ஆய்வுக் கட்டுரைகளை பிரதி எடுத்து வைத்துக் கொண்டு, அசல் புத்தகத்தை மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும். இந்த ஆய்வு புத்தகம் திரும்ப வழங்கப்படமாட்டாது.

## ஆராய்ச்சிநிலை கட்டண விபரம்

| | | | |
|---|---|---|---|
| பயிற்சியின் துவக்கத்தில் | 1 x 1500 | : ரூ. | 1500.00 |
| பயிற்சியின் நிறைவாக | 1 x 1500 | : ரூ. | 1500.00 |
| **ஆராய்ச்சிநிலை பயிற்சிக்கான மொத்தக் கட்டணம்** | | : ரூ. | **3000.00** |

## மைய வித்யாபதி

## தலைமை அலுவலக அலுவலர்கள்



திருமதி. **S. லலிதா** B.A., DTP.,
**மேலாளர்**
2011 - Aug



திருமதி. **K. முத்துலட்சுமி** B.A.,
**மேற்பார்வையாளர்**
Nov - 2018




திரு. **K. வினோத்** DECE.,
**கணக்காளர்**
Nov - 2022

| | | | | |
|---|---|---|---|---|
| நிறுவனர் | - | திரு.மீனம் K.S. மணி பட்டாச்சாரியார் | - | **90922 22080** |
| மேலாளர் | - | திருமதி. S. லலிதா | - | **63855 85559** |
| மேற்பார்வையாளர் | - | திருமதி. K. முத்துலட்சுமி | - | **90922 26465** |
| கணக்காளர் | - | திரு. R. வினோத் | - | **73730 44901** |

மாணவர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள், வித்யாலயத்தின் நிர்வாக சிரமங்களை குறைத்துக் கொள்ள மேற்கண்ட அலைபேசி எண்களை தங்களுடைய அலைபேசியில் சேமித்து வைத்துக் கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

## இணையதளம்

நிறுவனத்தின் நோக்கங்களையும், செயல்பாடுகளையும் மாணவர்கள் மட்டுமின்றி உலகத்தில் உள்ள அனைவருக்கும் தெரிவிக்கும் பொருட்டு www.srihariastro.in என்ற இணையதளம் கடந்த 25.12.2012 அன்று நமது நிறுவனத்தால் துவங்கப்பட்டது.




இந்த இணையதளத்தில் நிறுவனம் தொடர்பான அனைத்து விபரங்களும், ஜோதிடப் பயிற்சி பெற விரும்பும் மாணவர்களுக்கு தேவையான பயிற்சி நடைபெறும் இடங்கள், பாடத்திட்ட விபரங்கள், கட்டணம் தொடர்பான அனைத்து விபரங்களும், நிறுவனத்தால் வெளியீடு செய்யப்பட்ட, ஜோதிட கணினி மென்பொருள் மற்றும் மொபைல் செயலிகளின் விபரங்கள் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. மேலும் sriharijodhidam@gmail.com என்கின்ற இமெயில் முகவரியையும், Sri Hari Jodhida Vidhyalayam என்ற முகநூல் முகவரியையும் கொண்டு செயல்பட்டு வருகிறது.

---

## அட்மின் இணையதளம்

ஸ்ரீஹரி ஜோதிட வித்யாலயத்தின் அனைத்து மையங்களிலும் பயிலும் மாணவர்களின் விபரங்களை அறிந்து கொள்ளும் வகையிலும், நிர்வாகம் தொடர்பான பல்வேறு பணிகள் மேற்கொள்ளவும், பயிற்சியில் இணைந்த அனைத்து மாணவர்களின் விபரங்களை பதிவேற்றம் செய்ய **அட்மின் இணையதளம்** 01.02.2016 அன்று துவங்கப்பட்டது. அன்றைய நாள் முதல் வித்யாலயத்தின் அனைத்து மையங்களிலும் பயிற்சியில் இணையும் மாணவர்களின் விபரங்கள், தேர்வு முடிவுகள் மற்றும் தகுநிலை விபரங்கள் ஆகியவை பதிவேற்றம் செய்யப்படுகின்றன. இந்த அட்மின் இணையதளம் துவங்கப்பட்ட நாள் முதல் தற்போது வரை 10,969 மாணவர்களின் விபரங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அட்மின் இணையதளம் துவங்கப்பட்ட மேற்குறிப்பிட்ட தேதிக்கு முன்பாக 5907 மாணவர்கள் இணைந்துள்ளார்கள். ஆக நிறுவனம் துவங்கிய நாள் முதல் தற்போது வரை 16,876 மாணவர்கள் பயிற்சியில் இணைந்து பயன்பெற்றுள்ளார்கள் என்பது குறிப்பிட தக்கது.

https://srihariastro.in/old/srihariastro_new/login.php




## ஸ்ரீஹரி ஜோதிடம் யூடியூப் சேனல்

தமிழகத்தில் கடந்த 15 ஆண்டு காலமாக நிறைவான சேவை செய்து கொண்டிருக்கும் நமது நிறுவனம் மாணவர்கள் ஜோதிட ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர்களின் நலன் கருதி **sriharijodhidam** என்கின்ற யூடியூப் சேனலை **14.01.2014** ல் துவங்கியுள்ளது. இந்த சேனலின் வாயிலாக பாரம்பரியமிக்க நமது சனாதன தர்மம் தொடர்பான கருத்துக்களும், வாழ்வியல் தத்துவங்களும், வாழ்க்கை நெறிமுறைகளும் ஆன்மீக கருத்துகளும், ஜோதிட தகவல்களும் மற்றும் சிறப்பம்சம் பொருந்திய நமது ஸ்ரீஹரி ஜோதிட வித்யாலய ஜோதிட பயிற்சி ஆசிரியர்களான ஜோதிஷ வித்யாபதிகளின் ஜோதிட கருத்துக்களும் தொடர்ந்து அவ்வப்போது வெளிவந்து கொண்டிருக்கின்றன. இதுவரை **174** வீடியோ பதிவுகள் இடம்பெற்றிருக்கிறது, தங்களின் ஜோதிட ஞானத்தை மேலும் அபிவிருத்தி செய்து கொள்ள நிறுவனத்தின் யூடியூப் சேனலை அவசியம் சப்ஸ்கிரைப் செய்து பயன்பெறவும். இதனால் நிறுவனத்தால் வெளியிடப்படுகின்ற பல்வேறு வீடியோ பதிவுகள் உடனடியாக தங்களுக்கு வந்து சேர்வதற்கான வாய்ப்புகள் உள்ளன. ஸ்ரீஹரி ஜோதிட பேரவை டெலிகிராம் குழுவில் நிகழ்த்தப்படும் இணைய வகுப்புக்களுக்கான வீடியோ தொகுப்புகள் நிறுவனத்தின் யூடியூப் சேனலில் பதிவேற்றம் செய்யப்படுவதால் உடனடியாக சப்ஸ்கிரைப் செய்து பயன்பெற வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம். தற்போது வரை **7500** க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்கள் இருக்கிறார்கள். **sriharijodhidam** என்கின்ற யூடியூப் சேனலை சப்ஸ்கிரைப் செய்வதற்கான லிங்க் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**https://youtube.com/@sriharijodhidam2607**

## ஸ்ரீஹரி ஜோதிட கணினி மென்பொருள் விளக்கம் *(Software)*




வித்யாலயத்தின் ஜோதிடர் குழுவால், ஒரு ஜாதகத்திற்கு பல்வேறு கோணங்களில் பலன் காண்பதற்கான நிலைகளை கொண்டு ஜோதிட மென்பொருள் ஒன்றை நிறுவனம் வெளியீடு செய்துள்ளது. ஜாதக கணிதம், பலாபலன்கள் அறிதல், திருமணப் பொருத்தம், முகூர்த்த நிர்ணயம் ஆகிய விபரங்களை கொண்டு ஜோதிட மாணவர்களுக்கு பல நிலைகளில் உதவி புரியும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த மென்பொருள் மாணவர்களுக்கு மட்டுமல்லாமல் விருப்பப்படும் பொது மக்களுக்கும் வழங்கப்படும். வித்யாலயத்தின் இந்த மென்பொருள் **24.10.2016** ம் நாள் வெளியிடப்பட்டு, மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு வழங்கி சேவையாற்றி வருகிறது. இந்த ஜோதிட மென்பொருள் மாணவர்களுக்கு ரூ **4000/-** வீதமும் வெளி நபர்களுக்கு ரூ **5000/-** வீதமும் பெற்றுக் கொண்டு வழங்கி வருகிறது. மென்பொருளைப் பற்றி மேலும் அறிந்து கொள்ளவும், இதன் மாதிரியை பதிவிறக்கம் செய்து அறிந்து கொள்ள தேவையான விபரங்கள் வித்யாலயத்தின் இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. அடிப்படை பயிற்சி நிறைவடையாமல் மாணவர்களுக்கு மென்பொருள் வழங்கப்படமாட்டாது.

---

## மொபைல் செயலிகள்

ஸ்ரீஹரி ஜோதிட வித்யாலயமானது ஆறுவிதமான மொபைல் செயிலிகளை அறிமுகப்படுத்தி சேவையாற்றி வருகிறது. ஆன்மீகத்தையும், ஜோதிடத்தையும் இருகண்களாக பாவித்து இந்த இரு நிலைகளிலும் மாணவர்களை தகுநிலைப்படுத்தும் விதமாக மொபைல் செயலிகளை உருவாக்கி வெளியிட்டுள்ளது.

### 1. ஸ்ரீஹரி ஜோதிடர் செயலி

இந்த ஜோதிடர் செயலி உலகின் எந்த இடத்தில் பிறந்த குழந்தைக்கும் ஜாதகம் கணித்து பலன்களை அறிந்து கொள்ளும் விதமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. பஞ்சாங்கம், கோச்சாரம், ஜாதக கணிதம், திருமணப் பொருத்தம் மற்றும் முகூர்த்த நிர்ணயம் என ஜோதிடருக்கு தேவையான அனைத்து விசயங்களையும் மொபைல் ஃபோன் மூலமாக அறிந்து கொண்டு பலன்களை வெளிப்படுத்துவதற்கு ஜோதிடருக்கு பெருமளவு உதவும் வகையில் வடிவமைத்து **26.10.2018** அன்று வெளியீடு செய்துள்ளது,

## 2. ஸ்ரீஹரி மாணவர் செயலி




ஜோதிட மொபைல் செயலி வெளியீடு

26.10.2018 - கொங்கு வெள்ளாளக் கவுண்டர் திருமண மண்டபம். சேலம்.

பயிற்சியில் உள்ள ஜோதிட மாணவர்களுக்கு பெருமளவு பயனுள்ளதாக வடிவமைக்கப்பட்ட, இந்த மாணவர் செயலியில் ஸ்ரீஹரி ஜோதிட வித்யாலயத்தின் **5** பாடப்புத்தகங்களில் உள்ள சிறப்பம்சம் பொருந்திய பல்வேறு கருத்துக்களை மொபைலில் பார்த்து ஆய்வுகள் செய்து அறிந்துகொள்ளும் விதமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த மாணவர் செயலியானது **26.10.2018** அன்று வெளியீடு செய்யப்பட்டுள்ளது, மேற்குறிப்பிட்ட இரண்டு மொபைல் செயலிகளை ரூ **1500/-** க்கு வழங்கி வருகிறது.

---

## 3. ஸ்ரீஹரி ஜோதிட களஞ்சிய செயலி



ஜோதிட களஞ்சியம் மொபைல் செயலி வெளியீடு

02.05.2019 - V.K.வேல்சாமி - சின்னம்மாள் கல்யாணமஹால். தேனி.

ஸ்ரீஹரி ஜோதிட வித்யாலயம் ஸ்ரீஹரி ஜோதிட களஞ்சியம் என்கிற மூன்றாவது மொபைல் செயலியை **02.05.2019**-ம் நாள் வெளியீடு செய்துள்ளது. ஜோதிடர்கள், ஜோதிட ஆர்வலர்கள், பொதுமக்கள் அனைவரும் பயன்படுத்தும் விதத்தில் ஜோதிட, ஆன்மீக தகவல்களோடு பாரம்பரியமிக்க நமது சனாதன தர்மத்தை மேலும் மெருகேற்றச் செய்யும் கருத்துக்களை அறிந்து கொள்ளும் விதமாக வடிவமைத்து வெளியிட்டுள்ளது. இந்த மொபைல் செயலியை நிறுவனம் மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு இலவசமாகவே வழங்குகிறது.

## 4. ஸ்ரீஹரி நாமஜெப மொபைல் செயலி

பொதுமக்களை இறை நாமாக்களை ஜெபம் செய்ய வைக்க வேண்டும் என்கிற உயரிய நோக்கோடு ஸ்ரீஹரி நாமஜெப மொபைல் செயலியை உருவாக்கிக் கொடுத்து பல்லாயிரக்கணக்கான நபர்களை நாம ஜெபம் மேற்கொள்ளச் செய்து வருகிறது. இச்செயலி முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது. கீழ்கண்ட இணைய முகவரியில் இச்செயலியை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**https://sriхariastro.in/home/naamajebham**

## 5. ஸ்ரீஹரி வித்யாபதி நிர்வாகச்செயலி

நிறுவனத்தின் அட்மின் இணையதளத்தில் உள்ள மாணவர்களின் அனைத்து விபரங்களையும் மொபைல் ஃபோன் வாயிலாக அறிந்து கொள்வதற்கு உதவும் வகையில் வித்யாபதி நிர்வாகச் செயலி வடிவமைக்கப்பட்டு **06.07.2022** அன்று வெளியீடு செய்யப்பட்டது. இச்செயலியானது வித்யாலயத்தின் ஜோதிட பயிற்சி ஆசிரியர்களான ஜோதிஷ வித்யாபதிகள் மட்டுமே பயன்படுத்த முடியும்.

## 6. ஸ்ரீஹரி மாணவர்கள் நிர்வாகச்செயலி

பயிற்சியில் இணையும் மாணவர்களின் பயன்பாட்டிற்காக இச்செயலி வடிவமைக்கப்பட்டு **06.07.2022** அன்று வெளியீடு செய்யப்பட்டுள்ளது. மாணவர் சேர்க்கையின் போது விண்ணப்பப் படிவங்களை நிரப்புவது முதல், பயிற்சி காலத்தில் பாடப்புத்தகங்கள் பெற்று கொள்ளுதல், தேர்வு முடிவுகளை அறிந்து கொள்ளுதல் ஆகியவற்றோடு நிறுவனத்தின் அனைத்து செயல்பாடுகளும் மாணவர்கள் அறிந்து கொள்ளும் விதமாக இச்செயலியானது வடிவமைக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் மொபைல் ஃபோனில் **Play store** - க்கு சென்று **SHJ Student** என்று டைப் செய்து செயலியை பதிவிறக்கம் செய்துகொள்ளவும். பின்பு தங்களின் வித்யாபதியை தொடர்பு கொண்டு Active கொடுக்கச் சொல்லவும்.பின்பு தங்களின் பதிவு செய்யப்பட்ட அலைபேசி எண்ணிற்கு மாணவர்களுக்கான நிர்வாகச் செயலியில் உள்நுழைவதற்கான பதிவீட்டாளர்பெயர் **(User Name)**, கடவுச்சொல் **(Password)**, **SMS** மூலமாக அனுப்பி வைக்கப்படும். அதனைக் கொண்டு உள்நுழைந்து சேர்க்கைகான விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து சமர்பிக்க வேண்டும்.

# பட்டமளிப்பு விழாக்கள்

ஸ்ரீஹரி ஜோதிட வித்யாலயம் தனது மாணவர்களுக்கு பிரம்மாண்ட விழாக்கள் மூலமே பட்டங்களை வழங்குகின்றது. ஒவ்வோர் ஆண்டும் **மே மற்றும் அக்டோபர்** மாதங்களில் வருடத்திற்கு இருமுறை இத்தகைய விழாக்கள் நடத்தப்படுகின்றன. சூழ்நிலை கருதி மாதம் மற்றும் தேதிகளில் மாற்றங்கள் செய்யப்படும். இந்த இரண்டு பட்டமளிப்பு விழாக்களில் அக்டோபர் மாதம் நடத்தப்படும் விழா வித்யாலயத்தின் துவக்க ஆண்டு விழா என்பதால் வேள்வி பூஜையோடு பிரம்மாண்டமாக நடத்தப்படும். விழா நடத்தப்படும் மையம் மற்றும் தேதிகள் நிறுவனரால் வித்யாபதிகளின் ஆலோசனைப்படி நிர்ணயிக்கப்படும்.

**நமது வித்யாலயத்தின் செயல்பாடுகளில், சில முக்கிய நிகழ்வுகளை தங்களின் கவனத்திற்கு கொண்டுவருகிறோம்.**

| | | |
|---|---|---|
| 24.10.2007 | - | ஸ்ரீ ஹரி ஜோதிட வித்யாலயத் தோற்றம். |
| 03.02.2008 | - | முதல் பயிற்சி வகுப்புக்கள் துவக்கம். |
| 12.03.2008 | - | முதல் பாகப் பாடப்புத்தகம் வெளியீடு<br>இடம்: தலைமை அலுவலக கட்டிடம் - தேனி. |
| 07.09.2008 | - | முதல் பட்டமளிப்பு விழா மற்றும் 2 - ம் பாகம் பாடப்புத்தக வெளியீட்டு விழா.<br>இடம்: M.R.P. கல்யாண மஹால், எஸ்.எஸ்.காலனி, மதுரை. |
| 17.05.2009 | - | 2 - வது பட்டமளிப்பு விழா<br>இடம்: ஆதித்யா மஹால், பஸ்நிலையம், தேனி. |
| 19,20 . 12. 2009 | - | 3 - வது பட்டமளிப்பு விழா, முதல் வேள்வி பூஜை<br>3 - ம் பாகம் பாடப்புத்தக வெளியீட்டு விழா<br>ஸ்ரீ ஹரி ஜோதிடப் பேரவை துவக்க விழா .<br>இடம்:N.R.T. மக்கள் மன்றம், N.R.T.நகர், தேனி. |
| 30.05.2010 | - | 4 - வது பட்டமளிப்பு விழா.<br>இடம் : ஹோட்டல் வெஸ்டர்ன் காட்ஸ், தேனி. |
| 6,7.12.2010 | - | 5 - வது பட்டமளிப்பு விழா மற்றும் 2- வது வேள்வி பூஜை<br>இடம்: கொங்கு கலையரங்கம், அவிநாசி, திருப்பூர். |
| 30.06. 2011 | - | 6 - வது பட்டமளிப்பு விழா<br>இடம்: T.T.S. திருமணமஹால், திண்டுக்கல். |
| 20.11.2011 | - | 7 - வது பட்டமளிப்பு விழா<br>இடம்: யோகா கல்யாண மஹால், ஸ்ரீ ரங்கம், திருச்சி |

| | | |
|---|---|---|
| 16, 17, 18- 05 - 2012 | - | 3 - வது வேள்வி பூஜை விழா, ஸ்ரீஹரிநாராயணப்பெருமாள் பிரதிஷ்டை விழா, 8 - வது ஜோதிடப் பட்டமளிப்பு விழா.<br>இடம்: நாலுவட்டகை யாதவ சங்க திருமண மண்டபம், திருக்கோஷ்டியூர் - சிவகங்கை மாவட்டம். |
| 02.10.2012 | - | 9 - வது ஜோதிடப் பட்டமளிப்பு விழா<br>இடம்: டாக்டர் . T.V.சிவானந்தம் மெமோரியல் ஹால், கோவை. |
| 25.12.2012 | - | 4 - ம் பாகம் பயிற்சி பாடநூல் வெளியீடு, இணையதள துவக்கம்.<br>இடம்: ராணி சீதை ஆச்சி திருமணமண்டபம், கரூர். |
| 31.05.2013 | - | 10 - வது ஜோதிட பட்டமளிப்பு விழா, 4 - வது வேள்வி பூஜை விழா<br>5 - ம் பாகம் பயிற்சி பாடநூல் வெளியீடு,<br>இடம் :M.R.P. கல்யாண மஹால், எஸ்.எஸ்.காலனி மதுரை. |
| 09.10.2013 | - | 11 - வது ஜோதிட பட்டமளிப்பு விழா,<br>இடம் :K.M. திருமண மண்டபம், சேலம். |
| 19.06. 2014 | - | 12 - வது ஜோதிட பட்டமளிப்பு விழா, 5 - வது வேள்வி பூஜை விழா<br>இடம் : ராஜ்மஹால் திருமண மண்டபம், திருநெல்வேலி. |
| 04.11. 2014 | - | 13 - வது பட்டமளிப்பு விழா<br>இடம் : வசந்தம் மஹால், தேனி |
| 14.07. 2015 | - | 14 - வது ஜோதிடப் பட்டமளிப்பு விழா, 6 - வது வேள்வி பூஜை விழா<br>இடம் : AVC திருமணமண்டபம், திருஇந்தளூர், மயிலாடுதுறை. |
| 31.10. 2015 | - | 15 வது ஜோதிடப் பட்டமளிப்பு விழா<br>இடம் : தரகுமண்டி குமாஸ்தாக்கள் சங்க கட்டிடம், திண்டுக்கல். |
| 24.05. 2016 | - | 16 வது ஜோதிடப் பட்டமளிப்பு விழா, 7-வது வேள்வி பூஜைவிழா<br>இடம் : AJS மஹால், காஞ்சிபுரம். |
| 24.10. 2016 | - | 17- வது ஜோதிடப் பட்டமளிப்பு விழா, 8-வது வேள்வி பூஜைவிழா<br>இடம்: தரகுமண்டி குமாஸ்தாக்கள் சங்க கட்டிடம், திண்டுக்கல். |
| 14.05.2017 | - | 18- வது ஜோதிடப் பட்டமளிப்பு விழா,<br>இடம்: V.K. வேலுச்சாமி, சின்னம்மாள் திருமண மண்டபம், தேனி. |
| 27.10. 2017 | - | 19 - வது ஜோதிடப் பட்டமளிப்பு விழா, 9-வது வேள்வி பூஜைவிழா<br>இடம் : V.L.கிருஷ்ணசாமி-ருக்மணியம்மாள் திருமணமண்டபம், தேனி. |

| | | |
|---|---|---|
| 31.05.2018 | - | 20 - வது ஜோதிடப் பட்டமளிப்பு விழா,<br>இடம் : V.S. செல்லம் செஞ்சுரி மஹால் மதுரை. |
| 26.10.2018 | - | 21- வது ஜோதிடப் பட்டமளிப்பு விழா, 10-வது வேள்வி பூஜைவிழா<br>இடம் : கொங்கு வெள்ளாளக் கவுண்டர் திருமண மண்டபம், சேலம். |
| 26.10.2018 | - | ஜோதிடர் செயலி, மாணவர் செயலி நிறுவனத்தின் முதல் இரண்டு ஜோதிட மொபைல் செயலிகள் வெளியீடு.<br>இடம் : கொங்கு வெள்ளாளக் கவுண்டர் திருமண மண்டபம், சேலம். |
| 02.05.2019 | - | 22- வது ஜோதிடப் பட்டமளிப்பு விழா,<br>இடம் : V.K. வேலுச்சாமி, சின்னம்மாள் திருமண மண்டபம், தேனி. |
| 02.05.2019 | - | நிறுவனத்தின் 3 - வது ஜோதிட களஞ்சியம் மொபைல் செயலி வெளியீடு.<br>இடம் : V.K. வேலுச்சாமி, சின்னம்மாள் திருமண மண்டபம், தேனி. |
| 24.10.2019 | - | 23- வது ஜோதிடப் பட்டமளிப்பு விழா, 11-வது வேள்வி பூஜைவிழா,<br>ஸ்ரீஹரி ஆராய்ச்சிநிலை ஜோதிட பயிற்சி வகுப்பு துவக்க விழா<br>இடம்: V.L.கிருஷ்ணசாமி-ருக்மணியம்மாள் திருமண மண்டபம், தேனி. |
| 14.05.2020 | - | 24- வது ஜோதிடப் பட்டமளிப்பு விழா, நிறுவனத்தின் 4 - வது மொபைல் செயலி ஸ்ரீஹரி நாம ஜெப மொபைல் செயலி வெளியீடு<br>இடம் : V.K. வேலுச்சாமி, சின்னம்மாள் திருமண மண்டபம், தேனி. |
| 10.04.2022 | - | 25- வது ஜோதிடப் பட்டமளிப்பு விழா, 12-வது வேள்வி பூஜைவிழா,<br>இடம்: V.L.கிருஷ்ணசாமி-ருக்மணியம்மாள் திருமண மண்டபம், தேனி. |
| 06.11.2022 | - | 26-வது ஜோதிடப்பட்டமளிப்பு விழா, 16-ம் ஆண்டு துவக்க விழா,<br>ஸ்ரீஹரியின் திருமணப்பொருத்தம் புத்தக வெளியீட்டு விழா<br>இடம் : V.K. வேலுச்சாமி, சின்னம்மாள் திருமண மண்டபம், தேனி. |
| 22.04.2023 | - | 27- வது ஜோதிடப் பட்டமளிப்பு விழா, 13-வது வேள்வி பூஜைவிழா,<br>இடம் : V.L.கிருஷ்ணசாமி-ருக்மணியம்மாள் திருமண மண்டபம், தேனி. |

மேற்கண்ட முக்கிய நிகழ்வுகள் தவிர இறையருளாலும், குருவருளாலும் தற்போது வரை **31 (BATCH)** நேரடி ஜோதிட பயிற்சி வகுப்புகளும், **6** ஆன்லைன் பயிற்சி வகுப்புக்களையும், **309** இலவச ஜோதிட முகாம்களையும், **484** பேரவை கூட்டங்களையும் நிகழ்த்தி சேவையாற்றி இருக்கிறது. இந்நிகழ்வுகளில் மாணவர்களும், முகாம்கள் மூலமாக பொதுமக்களும் என பல்லாயிரக் கணக்கானவர்கள் பயன்பெற்று இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஸ்ரீஹரி ஜோதிட வித்யாலயத்தின் பட்டமளிப்பு விழாக்கள்










## ஸ்ரீஹரி ஜோதிடப் பேரவையின் நோக்கங்கள் மற்றும் செயல்பாடுகள்

மாணவர்களின் ஜோதிடத்திறமையை வளர்ப்பதற்கு ஸ்ரீஹரி ஜோதிடப் பேரவை என்ற ஒரு அமைப்பை நமது வித்யாலயம் ஏற்படுத்தி இருக்கிறது.

## ஸ்ரீஹரி ஜோதிட பேரவையின் நோக்கங்கள்

01. ஸ்ரீஹரி ஜோதிட வித்யாலயத்தின் அனைத்து மைய ஜோதிடர்களையும் ஸ்ரீஹரி ஜோதிடப் பேரவை என்ற ஒரே குடையின் கீழ் ஒருங்கிணைப்பது.
02. நிறுவனர் - ஜோதிஷ வித்யாபதிகள் - பேரவை உறுப்பினர்கள் - ஜோதிட மாணவர்கள் என்ற வரிசையில் கட்டமைப்பை உருவாக்குவது.
03. உறுப்பினர்களிடையே நட்புறவை ஏற்படுத்துவது.
04. ஸ்ரீஹரி ஜோதிட வித்யாலயத்தின் ஜோதிடப்பயிற்சி மாணவர்களை பயிற்சி காலத்திற்குப் பின்பும் நிறுவனத்தடன் தொடர்பில் இருக்கச் செய்வது.
05. பேரவை உறுப்பினர்கள் ஜோதிடத்திறன் மேம்பாட்டிற்கான பணிகளை தொடர்ந்து மேற்கொள்வது.
06. உறுப்பினர்களை ஜோதிட ஆராய்ச்சி மேற்கொள்ளச்செய்து, ஜோதிடத்திறமையை வெளிக்கொணர்வது.
07. ஆய்வின் அடிப்படையில் தற்போதுள்ள மனிதனின் வாழ்வியல் சூழல், ஜோதிடத்தின் வளர்ச்சி மற்றும் சமூக கட்டமைப்பிற்கு ஏற்றவாறு ஜோதிட விதிகளை கையாளுவதற்கு பயிற்சி அளிப்பது.
08. உறுப்பினர்களிடையே ஏற்படும் ஜோதிட மற்றும் ஆன்மீக சந்தேகங்களை தீர்க்க உதவி புரிவது.
09. ஜோதிடக் கருத்துக்களை தாங்கிய புத்தகங்களை வெளியீடு செய்வது.
10. நகர்ப்புற மற்றும் கிராமப்புற மக்களிடையே ஜோதிட விழிப்புணர்வை ஏற்படுத்துவது.
11. உலக நன்மைக்காக வேள்வி பூஜைகளை நிகழ்த்துவது.
12. ஜோதிடம் அறிந்த மானுடம் செய்வது.
13. நமது பாரத தேசத்தின் பண்பாடு, கலாச்சாரத்தின் முக்கியத்துவங்களை பொதுமக்களிடையே எடுத்துக்கூறி பின்பற்ற செய்வது. குறிப்பாக குழந்தைகளிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவது.
14. ஆன்மீகச் சுற்றுலாக்களை மேற்கொள்வது.
15. வாழ்வின் நோக்கம் யாது? என்பதை உணர்த்தி, தர்ம நெறிமுறைகளோடு கூடிய வாழ்க்கையை அனைவரையும் வாழ செய்வது.

# ஸ்ரீஹரி ஜோதிட பேரவையின் செயல்பாடுகள்

01. உறுப்பினர்கள் அனைவரும் ஸ்ரீஹரி ஜோதிட பேரவை என்ற டெலிகிராம் குழுவில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

02. நிறுவனர் மற்றும் வித்யாபதிகள் குழுவினரால் அவ்வப்போது நேரடி மற்றும் இணைய வழி பேரவைக் கூட்டங்கள் நடத்தப்படும்.

03. ஸ்ரீஹரி ஜோதிட பேரவை டெலிகிராம் குழுவில் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமைகளிலும் இரவு 7 மணிக்கு "மங்களச் செவ்வாயில் ஸ்ரீஹரியின் ஜோதிட முழக்கம்" எனும் நிகழ்ச்சி வாயிலாக பல்வேறு ஜோதிட தலைப்புகளில் இணையவழி ஜோதிட கருத்தரங்குகள், நிறுவனர் மற்றும் வித்யாபதிகள் குழுவினரால் நடத்தப்படும்.

04. ஸ்ரீஹரி ஜோதிட பேரவை டெலிகிராம் குழுவில் ஒவ்வொரு ஆங்கில மாதத்தின் இரண்டாவது புதன்கிழமை "புண்ணிய புதனில் ஸ்ரீஹரியின் ஜோதிட புதையல்" எனும் வாய்ஸ் சாட் நிகழ்ச்சி வாயிலாக ஜோதிட தலைப்புகளில் இணையவழி ஜோதிட கருத்தரங்கம் நிறுவனர் ஐயா அவர்களால் நடத்தப்படும்.

05. ஸ்ரீஹரி ஜோதிட பேரவை டெலிகிராம் குழுவில் ஒவ்வொரு ஆங்கில மாதத்தின் மூன்றாவது வியாழக்கிழமை "அறிவோம் ஆன்மீகம்" எனும் தலைப்பில் நிறுவனர் மற்றும் ஜோதிஷ வித்யாபதிகள் குழுவினரால் இணையவழி ஜோதிட கருத்தரங்கம் நடத்தப்படும்.

06. ஸ்ரீஹரி ஜோதிட பேரவை டெலிகிராம் குழுவில் ஒவ்வொரு ஆங்கில மாதத்தின் நான்காவது வெள்ளிக்கிழமை "ஆராய்ச்சி களம்" எனும் தலைப்பில் நிறுவனர், ஜோதிஷ வித்யாபதிகள் மற்றும் பேரவை உறுப்பினர்கள் ஆகியோர்கள் பலன் காணும் போது கிடைத்த அனுபவங்களை பகிர்ந்து கொள்ளக்கூடிய இணையவழி ஜோதிட கருத்தரங்கம் நடத்தப்படும்.

07. ஸ்ரீஹரி ஜோதிடப் பேரவை டெலிகிராம் குழுவில் ஒரு ஆங்கில மாதத்தில் வரும் 4 செவ்வாய்க்கிழமைகள், இரண்டாவது வாரத்தில் 1 புதன்கிழமை, மூன்றாவது வாரத்தில் 1 வியாழக்கிழமை, நான்காவது வாரத்தில் 1 வெள்ளிக்கிழமை என 7 இணையவழி ஜோதிட கருத்தரங்குகள் நடத்தப்படும்.

08. ஸ்ரீஹரி ஜோதிடப் பேரவை டெலிகிராம் குழுவில் வித்யாலயத்தின் வித்யாபதிகள் குழுவினரால் எழுத்துப்பதிவு, பேனர், ஆடியோ, வீடியோ மற்றும் Pdf கோப்புகள் மூலமாக ஜோதிடப்பதிவுகளும், ஜோதிடத்துணுக்குகளும் ஜாதகப்பலன் கூறுவதற்கு பயன்படும் விதமாக பதிவு செய்யப்படும்.

09. தமிழகத்தின் பல பகுதிகளில் உறுப்பினர்களைக் கொண்டு ஜோதிட, ஆன்மீக விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும்.

# ஸ்ரீஹரி ஜோதிட பேரவை உறுப்பினராக இணைவதற்கான விதிமுறைகள்

01. ஸ்ரீஹரி ஜோதிட வித்யாலயத்தின் மாணவராக இருக்க வேண்டும்.

02. ஸ்ரீஹரி ஜோதிட வித்யாலயத்தின் உயர்நிலைப் பயிற்சியை நிறைவு செய்திருக்க வேண்டும்.

03. பேரவை உறுப்பினர் கட்டணமாக வருடத்திற்கு ரூ 200/- மட்டும் வித்யாபதிகள் மூலமாக செலுத்த வேண்டும்.

04. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஸ்ரீஹரி ஜோதிடப் பேரவை உறுப்பினர் சேர்க்கை விண்ணப்பப்படிவ இணைப்பை பயன்படுத்தி, கேட்கப்பட்டுள்ள விபரங்களைப் பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டும்.

05. சேர்க்கை விண்ணப்பப்படிவம் பெற்றுக்கொண்டு பின், பேரவை உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை தனிப்பட்ட முறையில் வாட்ஸ் அப் மூலமாக அனுப்பி வைக்கப்படும்.

06. ஒரு குறிப்பிட்ட மையத்தில் இணைந்த பேரவை உறுப்பினர், நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட எந்த வித்யாபதி நடத்தும் பேரவை கூட்டத்திலும் கலந்து கொள்ளலாம்.

07. இதற்காக துவங்கப்பட்ட டெலிகிராம் குழுவின் நடவடிக்கைகளைத் தொடர்ந்து கவனிக்க வேண்டும். முடிந்த வரையில் இணையவழி ஜோதிட கருத்தரங்குகளில் பங்கேற்க வேண்டும்.

தெய்வீகக் கலையாம் ஜோதிடக்கலையை கற்று வரும் மாணவர்கள் அனைவரையும் ஜோதிடம் எனும் குடையின் கீழ் இணைத்து, நல்ல சமூக மாற்றத்தை ஏற்படுத்தும் இந்த மகத்தான இப்பணிக்கு, வித்யாலயத்தின் மாணவராகிய தாங்கள் ஸ்ரீஹரி ஜோதிட பேரவை உறுப்பினராக இணைந்து பயன்பெற வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். மேலும் ஸ்ரீஹரி ஜோதிட பேரவை தொடர்பான விபரங்களை வித்யாலயத்தின் வித்யாபதிகள் உயர்நிலை பயிற்சி நிறைவு பெற்றவுடன் தங்களுக்கு தெரிவிப்பார்கள்.

ஸ்ரீஹரி ஜோதிட வித்யாலயம் இதுவரை **484** பேரவை கூட்டங்களை நிகழ்த்தியுள்ளது. நிறுவனம் தற்போது வரை நிகழ்த்தியுள்ள பேரவைக் கூட்டங்கள் தொடர்பான விபரங்களைக் கீழ்கண்ட இணைய முகவரியில் காணலாம்.

**https://srihariastro.in/old/srihariastro_new/council_meeting_list.php**

## இலவச ஜோதிட முகாம்

வித்யாலயத்தில் ஓராண்டு பயிற்சியை நிறைவு செய்த மாணவர்களுக்கு செய்முறைப் பயிற்சி கொடுக்கும் விதமாகவும், பொதுமக்களிடையே ஜோதிட சாஸ்த்ரம் தொடர்பான முழு விழிப்புணர்வு ஏற்படவும், ஆறு மாதங்களுக்கு ஒருமுறை நிறுவனம் ஒவ்வொரு கிளைகளிலும் இலவச ஜோதிட முகாம்களை நடத்தும். இந்த முகாமில் கலந்து கொள்ளும் பொதுமக்களின் ஜாதகங்கள் ஆய்வு செய்யப்பட்டு பலாபலன்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. மேலும் ஜோதிட சாஸ்த்ரம் தனி மனிதனுக்கு அனைத்து நிலைகளிலும் பயன்படக்கூடிய மிக உன்னத உயரிய சாஸ்த்ரம் என்பதனை பொதுமக்கள் உணரும்விதமாக கருத்துப் பரிமாற்றங்களையும், துண்டுப்பிரசுரங்களையும், ஃப்ளக்ஸ் பேனர் மூலமாகவும் வெளிப்படுத்தி சேவையாற்றி வருகிறது. இந்த சேவையை நிறுவனம் இலவசமாகவே செய்து வருகிறது.

நிறுவனத்தில் தற்போதுவரை நிகழ்த்தப்பட்ட **309** இலவச ஜோதிட முகாம்களில் **6,217** பொதுமக்கள் கலந்து கொண்டுள்ளனர். இதில் **13,779** ஜாதகங்கள் ஆய்வு செய்யப்பட்டு பலன்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இந்த உன்னத சேவையை வித்யாலயத்தில் பயிற்சி நிறைவு செய்த **1,880** ஜோதிடர்கள் கலந்து கொண்டு பலன்களை வெளிப்படுத்தி உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஸ்ரீஹரி ஜோதிட வித்யாலயம் நிகழ்த்திய இலவச ஜோதிட முகாம்கள் தொடர்பான விபரங்களைக் கீழ்கண்ட இணைய முகவரியில் பார்க்கலாம்.

https://srihariastro.in/old/srihariastro_new/freecamp_list.php

---

## ஜாதக நோட்டுப்புத்தகம்




வித்யாலயத்தின் வித்யாபதிகளால் தயாரிக்கப்பட்ட, மாணவர்களின் ஜோதிட கணித திறமையை வளர்த்துக் கொள்ளும் வகையில் ஜாதக நோட்டுப்புத்தகம் ஒன்றை நிறுவனம் வெளியீடு செய்திருக்கிறது. இந்த ஜாதக நோட்டுப்புத்தகம் தேவைப்படும் மாணவர்களுக்கு, நோட்டு ஒன்று ரூ **50/-** வீதம் நன்கொடையாக பெற்றுக் கொண்டு வழங்கப்படும். கொரியர் சர்வீஸ் மூலம் பெற ஒரு நோட்டிற்கு ரூ **10/-** கூடுதலாக வசூலிக்கப்படும். நிறுவனத்தால் வெளியீடு செய்யப்பட்டுள்ள இந்த ஜாதக நோட்டுப்புத்தகம் முற்றிலும் வண்ணமயமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. வித்யாலயத்தில் பயிற்சி நிறைவு செய்த மாணவர்கள், இந்த நோட்டுப்புத்தகத்தில் தான், ஜாதகம் எழுதி தருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## நிறுவனரின் ஆசியுரை

புதிய மாணவர்கள் அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள், தங்களின் பூர்வ ஜென்ம புண்ணியத்தாலும், தங்களின் முன்னோர்கள் செய்த புண்ணிய பலத்தாலும், தங்களது இஷ்ட தெய்வத்தின் பரிபூரண அனுக்கிரகத்தாலும், இந்த விளக்கவுரை புத்தகமானது தங்களுக்கு கிடைத்திருக்கிறது.

தங்களுடைய வாழ்க்கையில் நீங்கள் சந்தித்த அனைத்து பலன்களுக்கும், இனி நீங்கள் சந்திக்க இருக்கின்ற அனைத்துப் பலன்களுக்கும் தாங்கள் ஜனனமான நேரத்திற்கான கிரகநிலையே மிக முக்கிய காரணமாக அமைந்துள்ளன. இந்த கிரகநிலையின் அடிப்படையிலேயே தங்களுக்கு நடைபெறுகின்ற அனைத்து பலன்களும் அமையும். ஜோதிடம் பயில வேண்டும் என்ற ஆர்வம் தங்களுக்கு ஏற்பட்டுள்ளதால் ஜோதிட சாஸ்த்ரம் போன்ற உயரிய சாஸ்த்திரத்தை முழுமையாக கற்று, சமூகத்திற்கு சேவையாற்றிட வேண்டும் என்கிற மிக உயரிய பிராரப்தத்தோடு தங்களின் ஜனனம் அமைந்துள்ளது என்பதை உணருங்கள்.

இறையருள் பூரணமாக நிரம்பப்பெற்றவராக, தர்மம் தவறாத, அறவழியில் நடப்பவராக, சாஸ்த்ரம் அறிந்தோருக்கு உரிய மரியாதை வழங்குபவராக, சிறந்த ஆன்மீகப்பணிகளை மேற்கொள்பவராக, பிறருக்கு உதவும் தயாளகுணம் கொண்டவராக, பொருள் மீது அவ்வளவாகப் பற்றில்லாமல், தான, தர்மங்களை செய்யும் நபராக, அனேக நபர்களுக்கு நல்வழிகாட்டி சிறப்பான வாழ்க்கை அமைய உதவுபவர்களாகவும், இவை எல்லாவற்றிற்கும் மேலாக சாஸ்த்ரம் இப்புவி உள்ளவரை நிலைத்து நின்று, அவற்றை மக்கள் அறிந்து கொண்டு, நல்வழியோடு கூடிய வாழ்க்கை வாழவேண்டும் என்கிற உயரிய நோக்கம் கொண்டவராகவும், தாங்களோ, தங்களின் முன்னோர்களோ இருப்பதால் ஜோதிடம் என்கிற உயரிய சாஸ்த்திரத்தை படிக்க வேண்டும் என்கிற பிராரப்தம் தங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

மேற்கூறிய எல்லா நிலைகளிலோ, அல்லது ஏதாவது ஒரு சில நிலைகளிலோ தொடர்புடைய நபராக தாங்களோ, தங்களின் முன்னோர்களோ இல்லாமல், ஜோதிடம் படிக்க வேண்டும் என்கிற எண்ணம் தங்களுக்கு ஏற்பட வாய்ப்பே இல்லை. எத்தனையோ கோடி மக்கள் வாழ்கின்ற இப்புண்ணிய பூமியில் ஜோதிடம் என்னும் மிக உயரிய சாஸ்த்ரத்தை அறிந்து கொள்ளவேண்டும் என்கிற பிராரப்தம் அனைவருக்கும் அமைந்துவிடுவது இல்லை. தாங்கள் அப்பேர்ப்பட்ட மிக உயரிய பிராரப்தத்தோடு பிறந்துள்ளதால் இந்த வித்யாலயத்தை நாடி வந்துள்ளீர்கள்.

தாங்கள் ஜோதிட சாஸ்திரம் அறிந்த நபராக ஆவதற்கு அடியேனும், பயிற்சி ஆசிரியர்களான ஜோதிஷ வித்யாபதிகளும், தங்களுக்கு உதவப்போகிறோம். இறையருள் பூரணமாக நிரம்பப்பெற்ற **ஸ்ரீஹரி ஜோதிட வித்யாலயத்தில்** இதுவரை இணைந்து, படித்து, பயன்பெற்ற பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் வரிசையில் தாங்களும் இணைந்துள்ளீர்கள் என்பதை பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

ஜோதிடம் தொடர்பாக எதையெல்லாம் அறிந்துகொள்ள வேண்டும் என்று விரும்புகிறீர்களோ, அவை எல்லாவற்றையும் நமது வித்யாலயம் மூலமாக தாங்கள் அறிந்துகொள்ள முடியும். அநேக அனுபவமிக்க ஆசிரியர்களைக் கொண்டு தமிழகத்தின் பல பகுதிகளில் **80** க்கும் மேற்பட்ட கிளைகளில் கடந்த பல ஆண்டுகளாக மாணவர்களுக்கு ஜோதிடப் பாடங்களை நடத்திக் கொண்டிருக்கக் கூடிய, ஒரே வித்யாலயமான ஸ்ரீஹரி ஜோதிட வித்யாலயத்தில் தாங்கள் இணைந்துள்ளீர்கள் என்பதை தங்களுக்கு குறிப்பிட விரும்புகிறேன்.

பயிற்சிக்கான இடம், உபகரணங்கள், திறமையும், அனுபவமும் மிக்க ஆசிரியர்கள் என அனைத்து ஆய்வுகளையும் மேற்கொண்டு, திறமைமிகு மாணவர்களை உருவாக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுவரும் நமது வித்யாலயத்தில் தாங்கள் இணைந்து பயின்று ஜோதிட சாஸ்த்திரத்திற்கும், ஸ்ரீஹரி ஜோதிட வித்யாலயத்திற்கும் பெருமை சேர்க்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

தாங்கள் உடல் உள்ள சுத்தியோடு, இஷ்ட தெய்வத்தை மனதில் தியானித்து, பெற்றோரை வணங்கி, இந்த விளக்கக் குறிப்பு புத்தகத்தில் உள்ள அனைத்து விபரங்களையும் நன்கு அறிந்து கொண்டு, பின்பு இந்த புத்தகத்தின் பின் புறத்தில் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து, பயிற்சி மைய ஆசிரியரிடம் சேர்ப்பிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

தாங்கள் ஜோதிட சாஸ்த்ரமறிந்த தெய்வக்ஞனாக பரிணமித்து, அநேக நபர்கள் பயன்பெறும் வகையில் தங்களை தயார்படுத்த, அடியேனும், ஜோதிஷ வித்யாபதிகளாகிய வித்யாலயத்தின் பயிற்சி ஆசிரியர்களும், எங்களால் ஆன அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம் என உறுதிகூறுகிறோம். தாங்கள் எங்களுக்கு முழு ஒத்துழைப்பு நல்கி, பயிற்சியை முழுமையாக நிறைவு செய்து பயன்பெற வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். இதற்கு இறையருளும், குருவருளும் தங்களுக்கு என்றென்றும் துணைநிற்க வேண்டும் என ப்ரார்த்தித்து ஆசிர்வதித்து அமைகிறோம்.



சர்வ மங்களம் உண்டாகட்டும் ”

“நல்லாசிகளுடன்”

மீனம் **K.S.** மணி பட்டாச்சாரியார் B.A., D.Astro

நிறுவனர்

ஸ்ரீஹரி ஜோதிட வித்யாலயம்

**மாணவர் சேர்க்கை, பயிற்சி விபரங்கள், தேர்வு முடிவுகள் தொடர்பான எவ்வித பிரச்சனைகளுக்கும் நிறுவனரின் முடிவே இறுதியானது.**

## மாணவர்கள் கவனத்திற்கு

01. இவ்விளக்க உரைப்புத்தகத்தில் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தை பூர்த்திசெய்ய வேண்டும். மேலும் மாணவர்களுக்கான நிர்வாகச் செயலியை பதிவிறக்கம் செய்து அதிலுள்ள விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்தால் மட்டுமே சேர்க்கை பெற்றதாக கருதப்படும்.

02. விண்ணப்பப்படிவத்தில் கேட்கப்பட்டுள்ள அனைத்து விபரங்களையும் தெளிவாக பூர்த்தி செய்ய வேண்டும்.

03. பயிற்சியின் போது, முகவரியில் மாற்றம் இருப்பின் மாணவர்களுக்கான நிர்வாகச்செயலி வாயிலாக முகவரி மாற்றத்தை அப்டேட் செய்ய வேண்டும்.

04. விளக்கவுரை புத்தகம் பெறும்போது சேர்க்கை கட்டணம் ரூ. **100** மற்றும் முதல் மாத சேவைக்கட்டணம் ரூ.**600** சேர்த்து, மொத்தம் ரூ.**700** (சென்னை மையங்கள் **750 + 100 = 850**) பயிற்சி ஆசிரியரிடம் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளவேண்டும்.

05. பாடப்புத்தகங்களை தலைமை அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொண்டு குறித்த நேரத்தில் மாணவர்களுக்கு வழங்கி பயிற்சி கொடுக்க வேண்டும். ஆதலால், வித்யாபதிகள் தெரிவிக்கும் சமயத்தில் பாடப்புத்தகங்களுக்கான கட்டணங்களை செலுத்த வேண்டும்.

06. மாதாந்திர சேவைக் கட்டணத்தை பிரதி ஆங்கில மாதம் முதல் ஞாயிற்றுக்கிழமையில் பயிற்சி ஆசிரியரிடம் செலுத்தி இரசீது பெற்றுக் கொள்ளவேண்டும்.

07. தேர்வுக்கு ஒரு மாதத்திற்கு முன்பாகவே தேர்வு பற்றிய விபரங்கள் தங்களுக்கு தெரிவிக்கப்படும். விபரம் அறிந்த ஒரு வாரத்திற்குள் தேர்வு கட்டணம் செலுத்த வேண்டும்.

08. இந்த விளக்கவுரை புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டண விபரங்களைத் தவிர வேறு எந்த கட்டணங்களையும் மாணவர்கள் பயிற்சிக்காக செலுத்த வேண்டியது இல்லை. கூடுதலாக கட்டணம் வசூலிக்கப்பட்டால் தலைமை அலுவலகத்திற்கு தெரிவிக்கவும்.

09. தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு தமிழகத்தின் ஏதாவது ஒரு நகரத்தில் நிறுவனத்தால் நடத்தப்படும் பட்டமளிப்புவிழாவில் சான்றிதழ் வழங்கப்படும். இவ்விழாவிற்கு மாணவர்கள் அவசியம் வருகை புரிய வேண்டும். தவிர்க்க முடியாத காரணங்களால் விழாவில் கலந்து கொள்ள இயலாத மாணவர்கள் அடுத்த பட்டமளிப்பு விழாவில் தங்களின் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளலாம்.

10. அனைத்து வகுப்புகளிலும் கலந்து கொள்வதும், சரியான நேரத்திற்கு வகுப்பறைக்கு வருவதும் தங்களது முக்கிய கடமையாகும்.

ஸ்ரீ ராமஜெயம்

# ஸ்ரீ ஹரி ஜோதிட வித்யாலயம்

(அறக்கட்டளை - அரசு பதிவு எண் : 220/ BK IV / 2007 PKM)

A1 - 657 / W - 9 - சூர்யா நகர், பசுமை நகர் எதிர்புறம், கொடுவிலார்பட்டி மெயின்ரோடு, அரண்மனைப்புதூர், தேனி.

Web : www.sriahariastro.in E-mail : sriharijodhidam@gmail.com

## சேர்க்கை விண்ணப்பப்படிவம்

வருடம் :

பிரிவு :

விண்ணப்பப்படிவ எண் :

1. பெயர் (தமிழில்) :

   பெயர் (ஆங்கிலத்தில்) :

2. தந்தை / கணவர் பெயர் :

3. அஞ்சல் முகவரி :

பின்கோடு :

4. அலைபேசி எண் (1) :

   அலைபேசி எண் (2) :

   வாட்ஸ்அப் எண் :

5. மின் அஞ்சல் முகவரி :

6. பாலினம் : ஆண் ☐ பெண் ☐

7. பிறந்த தேதி : வயது :

8. தாய்மொழி :

9. கல்வி :

10. தொழில் :

11. பயிற்சியின் நோக்கம் (தகவலுக்கு மட்டும்) :

- ☐ 1. தொழிலாகக் கொள்ள
- ☐ 2. சொந்த உபயோகத்திற்கு
- ☐ 3. ஆராய்ச்சி செய்ய

12. சேர்க்கை கட்டண ரசீது எண் :

13. தாங்கள் எந்த விளம்பரம் மூலமாக பயிற்சியில் சேர நினைத்தீர்கள்

| | | |
|---|---|---|
| ☐ செய்தித்தாள் | ☐ துண்டு பிரசுரம் | ☐ விளம்பர பேனர் |
| ☐ உள்ளூர் தொலைக்காட்சி | ☐ வால் போஸ்டர் | ☐ மாணவர்கள் மூலம் |

## உறுதி மொழி

ஸ்ரீஹரி ஜோதிட வித்யாலயத்தின் அனைத்து செயல்பாடுகளையும், பயிற்சி முறையினையும் அறிந்து கொண்ட நான், இவ்வித்யாலயத்தில் சேர்ந்து பயில என் முழுசம்மதத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் மேற்கூறிய விபரங்கள் அனைத்தும் உண்மையானவை என்றும் உறுதியளிக்கின்றேன்.

**இடம் :** **நாள் :**

பயிற்சி ஆசிரியர் கையொப்பம் பயிற்சி பெறுபவர் கையொப்பம்

## OFFICE USE ONLY

**ICL No / Date :** **Cash Memo No :**

**Batch No :** **Bill No / Date :**

(Admission No) (Registration No)

**SHJ Ad** ☐☐☐☐☐☐☐☐ **SHJ Rg** ☐☐☐☐☐☐☐☐☐☐

**Computer entry** **Cashier** **Ao** **Founder**

# உறுதிமொழி

## ஸ்ரீஹரி ஜோதிட வித்யாலயத்தின் ஓர் அங்கமாகிய நான்,

01. ஆன்மீகம், கலாச்சாரம் குடி கொண்ட புண்ணிய பூமியான பாரதத்தின் குடிமகன் என்ற பொறுப்பை உணர்ந்து, நாட்டின் கலாச்சாரத்தையும், ஆன்மீக நெறிமுறைகளையும் காப்பாற்ற அயராது பாடுபடுவேன்.

02. ஜோதிட சாஸ்திரத்தை திறம்பட பயிலுவதோடு, அவற்றை தொடர்ந்து பின்பற்றி சமூகத்தினரையும் பின்பற்றச் செய்வேன்.

03. தெய்வக்ஞ லட்சணம் என்ன என்பதை உணர்ந்து, அவ்விதம் இருக்க முயற்சி மேற்கொள்வதோடு, தொடர்ந்து ஜோதிட ஆராய்ச்சிகளை மேற்கொள்வேன்.

04. நான் அறிந்த ஜோதிட சாஸ்திரத்தை, ஏனையோரும் அறிந்துகொள்ள என்னாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வேன்.

05. ஒழுக்கம், பக்தி இவை ஒரு மனிதனின் புனிதத்துவத்தை உயர்த்தக் கூடியது என்பதை உணர்ந்து, அவற்றை அனைத்து நிலைகளிலும் பின்பற்ற முயற்சி மேற்கொள்வேன்.

06. மாமிசம் உண்ணாமல், போதை பழக்க வழக்கங்களுக்கு ஆட்படாமல், மனதையும் சரீரத்தையும் பேணுவேன்.

07. ஜோதிடத்தின் இறையாண்மைக்கு என்றும் பாதுகாப்பாக இருப்பேன்.

08. பெற்றோர்களையும் பெரியோர்களையும் போற்றுவேன்.

09. சாஸ்திரங்கள் காட்டிய தார்மீக நெறிமுறைகளைப் பின்பற்றியும், ஏழை எளியவர்க்கும் திக்கற்றவர்களுக்கும் உதவிகள் செய்தும், தர்மத்தின் வழியில் வாழ்வேன்.

10. என்னை நாடி வருபவர்களுக்கு முடிந்தவரையில் ஜோதிட சேவையாற்றுவேன்.

11. ஜோதிட சாஸ்திரத்தின் குரு பரம்பரையை அறிந்து கொண்டு, எமக்கு ஜோதிடம் கற்பித்த குருமார்களுக்கு என்றும் நன்றி உடையவனாக இருப்பேன்.

12. சமூகத்தில் மிகச்சிறந்த அந்தஸ்தை ஏற்படுத்திக் கொடுத்த ஸ்ரீஹரி ஜோதிட வித்யாலயத்திற்கு என்றும் நன்றி உடையவனாகவும், விஸ்வாசமாகவும் இருப்பேன் என்று உறுதி கூறுகின்றேன்.



# ஸ்ரீஹரி ஜோதிட மென்பொருள்

ஜாதகக் கணிதம், பலாபலன்கள், திருமணப்பொருத்தம், தொடர்பாக ஜோதிடர்களுக்கு பெருமளவு பயன்படக்கூடிய ஜோதிட மென்பொருள். இது முற்றிலும் திருக்கணித முறைப்படி தயாரிக்கப்பட்டது.

## மென்பொருள் விபரங்கள்

* உலகின் எந்த இடத்தில் பிறந்த குழந்தைக்கும் ஜாதகம் கணிக்கும் வசதி.
* 50 பக்கங்களுக்கு (புs) அளவில் ஜாதகம் பிரிண்ட் எடுக்கும் வசதி.
* இலக்னரீதியாக பாவகாதிபதி பன்னிரு பாவகங்களில் நிற்கும் பலன்.
* கிரகங்கள் பன்னிரு பாவகங்களில் நிற்கும் பலன்.
* திசாபுத்தி பலன்கள், தோஷ விபரங்கள், யோகங்கள்.
* திருமணப்பொருத்தம், முகூர்த்த நிர்ணயம், கோச்சாரம் பற்றிய விபரங்கள்.
* பஞ்சாங்க முழு விபரங்கள் பார்க்கும் வசதி.
* பஞ்சாங்கம் முழு விபரங்கள் பிரிண்ட் எடுக்கும் வசதி.
* ஏகாதசி, பிரதோஷம், சஷ்டி போன்ற பண்டிகை காலம் அறியும் வசதி.
* குறிப்பிட்ட நாட்களுக்குள் சந்திராஷ்டமம் பார்க்கும் வசதி.
* குறிப்பிட்ட நாட்களுக்குள் ஏழரைச் சனி பார்க்கும் வசதி.
* குறிப்பிட்ட நாட்களுக்குள் அஷ்டமச் சனி பார்க்கும் வசதி.
* கிரகங்களின் குறிப்பிட்ட நாட்களில் எங்கு உள்ளார்கள் என்பதை பார்க்கும் வசதி.
* அட்சாம்ச ரீதியாக குறிப்பிட்ட இடங்களில் இராசிப்பரிமானம் பார்க்கும் வசதி.
* ஹோரைகள் தேதி இடத்திற்கு ஏற்றாற்போல் எந்த நேரத்திற்கும் பார்க்கும் வசதி.
* சூரிய உதய அஸ்தமனங்களை தேதி, இடத்திற்கு தகுந்தார்போல் அறிந்து கொள்ளும் வசதி.
* பலாபலன்களை தாங்களே கூடுதலாகவே எழுதி பிரிண்ட் எடுக்கும் வசதி.
* எண் கணிதம்.
* மணி - நாழிகை, நாழிகை - மணி மாற்றி கண்டறியும் வசதி.
* தனிநபர் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் ஜாதகங்களை பதிவு செய்யும் வசதி.
* ஜாதகரின் போட்டோ பதிவிடும் வசதி.
* 3500 வது வருடம் வரை கிரகங்களின் நிலை அறியும் வசதி.
* கிரகங்களின் உதய, அஸ்தமன, வக்ரம் அறியும் வசதி.
* துல்லியமாக கிரகணங்களையும் அறிந்து கொள்ளும்வசதி.
* துணைக்கோள்கள் பற்றிய விபரம் அறியும் வசதி.
* எந்த ஒரு தேதிக்கும் சந்திரன் நிலையை அறியும் வசதி.
* கிரகங்களின் பெயர்ச்சிகளை அறிந்து கொள்ளும் வசதி.
* கிரகங்களின் இயக்கங்களை அறியும் வரை படத்துடன் பார்க்கும் வசதி.
* ஜாதக பலன்களை மிகத் தெளிவாக அறிந்து கொள்ளும் வசதி.

ஆகிய சிறப்பம்சங்களோடு கூடிய ஸ்ரீஹரி ஜோதிட வித்யாலய மென்பொருள் தேவைக்கு...

அழைக்கவும்... 9092226465, 6385585559,7373044901